# கண்டாவளைப்பிரதேச

# கலைஞர் விபர திரட்டு

(தொகுதி - 1)



**பிரதேச கலாசார பேரவை,**

பிரதேச செயலகம்,

கண்டாவளை, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளைப் பிரதேச
# கலைஞர் விபர திரட்டு

(தொகுதி 1)

**பிரதேச கலாசார பேரவை,**
பிரதேச செயலகம்,
கண்டாவளை,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

நூலின் பெயர் : கண்டாவளை பிரதேச
கலைஞர் விபரத்திரட்டு
(தொகுதி 1)
வகை : ஆவண நூல்
உரிமை : பிரதேச செயலகம்,
கண்டாவளை.
நிதி அனுசரணை : பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடமாகாணம்.
முதற்பதிப்பு : மார்கழி, 2015
வெளியீடு : பிரதேச கலாசார பேரவை,
பிரதேச செயலகம், கண்டாவளை.
வெளியீட்டெண் : 09
தொகுப்பு : த.அமலதாஸ்,
கலாசார உத்தியோகத்தர்,
கண்டாவளை.
பக்கங்கள் :
தாள் வகைகள் : 70gsm
பிரதிகள் : 350
அச்சுப்பதிப்பு : நிசா ஆட்ஸ்,
விசுவமடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம்-கண்டாவளை

-1989-

DIVISIONAL SECRETARIAT, KANDAWALAI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டாவளைப் பிரதேச கலாசாரப் பேரவை

பண்பாடு வளம்பெற கரம் இணைப்போம்

பிரதேச செயலகம் கண்டாவளை.

DIVISIONAL SECRETARIAT,KANDAWALAI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச கலாசார பேரவைக் கீதம்

**பல்லவி**

வளம் கொழிக்கும் கண்டா வளை வாழ்கவே - எம்
வாழ்வினில் வற்றாத ஊற்றாகவே - என்றும்
(வளம்)

**அனுபல்லவி**

உளம் களிக்கும் கூத்துக்கலை செழிக்கும் - எம்மை
உயர்த்தும் ஆலயந்தொறும் பொங்கலும் பூசையுமாய்
(வளம்)

**சரணங்கள்**

நெல் வயற் பசுமை நம் கண்களை நிறைக்கும்!
நெய்தலின் மீன்வளம் செல்வங்கள் கொழிக்கும்!
கல்வியை வளர்க்கின்ற கூடங்கள் எங்கும்!
கைத்தொழில் ஓங்கிடும் அற்புதம் எங்கும்!
(வளம்)

எளிமையும் நேர்மையும் அணியெனப் பூண்பார்
இறையடி தொழுவதில் பேரின்பம் காண்பார்!
உழுதுண்ணும் வாழ்க்கையின் மகத்துவம் உணர்வார்
ஓய்வறியார் எங்கள் உயிர்களில் வாழ்வார்!
(வளம்)

**“சோ.ப.”**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## "பண்புடையார் பட்டுண்டு உலகம்"

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் வாழும் கலைஞர்களது விபரங்கள் அடங்கிய கலைஞர் விபரத்திரட்டு - தொகுதி I வெளியிடுவதில் நாம் மட்டற்ற மகிழ்வடைகின்றோம். எமது பிரதேசத்தில் கலைகளை வளர்ப்பதற்காக அயராது உழைக்கும் உன்னதமான மனிதர்களின் விபரங்கள் இந் நூலில் தொகுக்கப்பட்டுள்ளது. கலைஞர்கள் வாழும் போதே கௌரவிக்கப்பட வேண்டும் என்பார்கள் அந்தவகையில் எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர்களை இந் நூலின்ஊடு உங்களுக்கு அறிமுகம் செய்வதன் ஊடாக அவர்களது கலையை, கலைத்திறத்தை, கலைச்சேவையை பகிர்ந்து கொள்ளுதல் இந் நூல் ஆக்கத்தின் நோக்காகும்.

கலையும் கலைஞர்களும் பிரவாகிக்கும் எம் கண்டாவளையில் கலைஞர்கள் பலர் செயற்கரிய சாதனைகள் பலவற்றை நிகழ்த்தி தமிழுக்கும் தமிழ் கலைஞர்களுக்கும் எமக்கும் எம் ஊருக்கும் புகழ் சேர்த்திருக்கின்றார்கள். அவர்களின் சுருக்க விவரணம் இந் நூலாய் விரிகிறது.

அவ்வகையில் இங்கே 33 கலைஞர்கள் அறிமுகமாகின்றார்கள், இன்னும் பலர் அறிமுகமாக இருக்கின்றார்கள். அவர்கள் விரைவில் கலைஞர் விபரத்திரட்டு தொகுதி 2 இலே உங்களோடு பேசுவார்கள்.5 காத்திருப்போம். நூலாக்கத்திற்கு உழைத்த அனைவருக்கும் நன்றி.

"கலையின்பமே நிலையின்பம்"

**த.முகுந்தன்,**
**பிரதேச செயலாளர்,**
**கண்டாவளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

**2010** ஆம் ஆண்டின் மீள் குடியேற்றத்தின் பின்னர் எமது கண்டாவளை பிரதேசம் பல்துறை சார்ந்த அபிவிருத்திகளை நோக்கி பயணித்துக்கொண்டு வருகிறது. இவ்வளர்ச்சி பொருளாதார, கல்வி, சுகாதார மற்றும் உட்கட்டமைப்புசார் அபிவிருத்திகளுடன் கலை, கலாசார விடயங்களிலும் இணைந்ததாக ஏற்படுகிறபோதே பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் ஒழுக்கங்கள், அழகியல், கலை உணர்வுகள், பழக்கவழக்கங்கள்,ஆன்மீக விடயங்கள் நேரியதாகவும் ஆரோக்கியம் மிக்கதாகவும் அமைந்துவிடும் இயல்பை பெறும். அந்தவகையில் பிரதேசத்தின் கலை, பண்பாட்டு அபிவிருத்திக்கு பெரும்பங்காற்றுபவர்கள் இங்கு வாழ்ந்த, வாழ்கின்ற கலைஞர்களாகின்றனர். காலங்காலமாக இவர்கள் வழியாக கட்டமைக்கப்பட்டு வருகின்ற கலைகளும் அவற்றுடன் இணைந்த வாழ்வுமே தமிழர் தம் மரபடையாளச் சின்னங்களாக மிளிர்வன.

எந்தவோர் இனத்தினதும் நிலைத்திரு தன்மையானது அவ் இனக்குழுமங்களால் காலங்காலமாக பேணப்பட்டுவரும், பாரம்பரிய கலைகளாலும் அதன் வழிவந்த பண்பாட்டு கோலங்களாலுமே உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றன என்பது மறுக்கமுடியாத உண்மையாகிறது. இன்று உலகில் பேசப்படும் சில மொழிகள் வரி வடிவங்களினை கொண்டிராதபோதும் அவ் அவ் இனக்குழுமங்களிற்குரிய பாரம்பரிய கலைகளாலும் அதன் வழி அக் குழுமங்கள் கட்டியமைத்த பண்பாட்டின் வழியும் நிலைபெற்றுள்ளமையை இன்றும் காண்கிறோம்.

கடந்த காலத்தில் எமது இனம் சந்தித்த பல அழிவுகள், உள்நாட்டு இடம் பெயர்வுகள் எமது கண்டாவளைப் பிரதேசத்தையும் விட்டுவைக்கவில்லை. இதனால் பல அரிய கலைகளும் அவற்றை போற்றிய பல கலைஞர்களும் அவர்களது கலை ஆளுமைகள் பற்றிய செய்திகள், ஆவணங்களும் பல அழிந்து போயுள்ளன. இன்று இவற்றினை பற்றிய தேடுதல்கள், பதிவுகள் செய்யும் முயற்சிகளும் மிக அருந்தல்களாவே உள்ளன. இவ் குறையின் சிறு பகுதியையேனும் நீக்கும் முயற்சியின் ஆரம்பக்கட்டமே இவ் தொகுப்பின் பிரசவிப்பாகிறது.

இவ் ஆவண தொகுப்பினூடாக பிரதேசத்தின் கலை ஆளுமைகள் பற்றிய சேவைகள் சமூகத்திற்கு இனங்காட்டப்படுகின்றன. இவர்களது சேவைகள் தமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமம், பிரதேசம், மாவட்டம், மாகாணம், தேசியம், சர்வதேசம் என விரிவு பெற்றுள்ள தன்மையை இந்நூல் பதிவு செய்கிறது. இந்நூல் இவர்களூடான சந்திப்புக்கள், தொலைபேசியூடான உரையாடல்கள், துறைசார்ந்தவர்கள் பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொண்ட புலமையாளர்கள் ஊடாகவும் நேரடியாக கண்டும், கேட்டும் பகிர்ந்தவற்றை தொகுத்து திரட்டி இந்நூல் பிரசவிப்பு இடம்பெற்றுள்ளது. இது முதல் முயற்சி, இதன் தொடர்ச்சிகள் எதிர்காலத்தில் இன்னும் விரிவு பெற வேண்டும் என்பதும் எமது எதிர்பார்ப்பு.

இவ் ஆவணவாக்கல் நிகழ்ச்சி திட்டத்தினை பிரதேச மட்டத்தில் செயற்படுத்த அனுமதி தந்த பிரதேச செயலர் அவர்களுக்கும் 2015 ஆம் ஆண்டின் பிரதேச கலாசார அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் ஆவணப்படுத்தலுக்காக நிதி அனுசரணையை வழங்கியிருந்த வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் இத் தொகுப்பு செயற்பாட்டிற்கு உதவிய கலாசார பேரவை உறுப்பினர்கள், பிரதேச கலைஞர்கள், மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் இறுதியாக இவ் தொகுப்பை அழகிய வடிவில் அச்சுப்பதிப்பு செய்து வழங்கிய நிசா ஆட்ஸ் நிறுவனத்தினருக்கும் இத்தருணத்தில் எமது நன்றியை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

**மார்கழி 2015.**

**பிரதேச கலாசார பேரவை,**
**பிரதேச செயலகம்,**
**கண்டாவளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரட்டின் உள்ளே...


கலைஞர் விபரம் பக்கம்

1. அமரர் கணபதிப்பிள்ளை கந்தசாமி 01
2. அமரர் இந்திரதாசன் சுதர்சன் 03
3. திரு.சி.கு.இராசையா 05
4. திரு.மு.செல்லத்துரை 07
5. திரு.வி.வேலாயுதபிள்ளை 09
6. திரு.கா.முருகேசு 11
7. திரு.மு.குணபாலசிங்கம் 13
8. திரு.க.நித்தியானந்தன் 14
9. திரு.நா.சிவபாக்கியநாதன் 16
10. திரு.சி.கனகராசா 18
11. செல்வி மு.நடனவதி 20
12. திருமதி க.ரதிதேவி 22
13. திரு.அ.ஜயம்பிள்ளை 24
14. திரு.ம.வேலாயுதபிள்ளை 26
15. திரு.ஆ.பாலசுப்பிரமணியம் 28
16. திரு.செ.விந்தன் 30
17. திரு.கா.பாலேஸ்வரன் 32
18. திரு.நா.உதயகுமார் 34
19. திரு.அமரசிங்கம் கேதீஸ்வரன் 36
20. திரு.ம.றோமியல் 38
21. திரு.சே.ஆறுமுகம் 40





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. திரு.ஆறுமுகம் செல்வராசா ____ 42
23. திரு.ந.றொபேட்நிக்சன் ____ 44
24. திரு.வ.சசிக்குமார் ____ 47
25. திருமதி பா.ஜஜீலா ____ 48
26. திரு.தெ.புரட்சிதாசன் ____ 50
27. திரு.பெ.புண்ணியராஜ் ____ 51
28. திரு.கை.துஸ்யந்தன் ____ 54
29. திரு.து.மோகனசிறி ____ 56
30. திரு.பா.வசந்தன் ____ 57
31. திருமதி கோ.தேவப்பிரியா ____ 59
32. திரு.ஆ.பேனாட் ____ 61
33. செல்வி வே.சுபிதா ____ 63



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர்
# கணபதிப்பிள்ளை கந்தசாமி
## (குஞ்சரக்கண்டு)
## - எழுத்தாக்கம் -

**ப**ன்றிசுட்டான் வடக்கு, கண்டாவளையில் கணபதிப்பிள்ளை சரஸ்வதிப்பிள்ளை தம்பதியின் ஏகபுத்திரனாக 1952.02.15 ஆம் திகதி பிறந்தவர் கந்தசாமி எனும் இக் கலைஞர். கண்டாவளை மகா வித்தியாலயத்தில் சாதாரண தரம் வரை கல்வி கற்றிருந்தவர். தந்தையின் வழியில் பண்டிதராக தமிழைக் கற்றதுடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பண்டிதர் அந்தோனிப் பிள்ளையிடமும் தமிழை விரும்பிக் கற்று தேறியவர். தொழிலுக்காக கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்க முகாமையாளராக பணியாற்றியிருந்த இவர் அமரர் ஐயம்பிள்ளை ஆசிரியரூடாக தமிழையும், வெண்பாவிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.

கல்வெட்டுக்கள் எழுதுதல், கந்த புராண படிப்பு, பெரிய புராண படிப்பு போன்ற வற்றில் தேர்ச்சியுடனும் பயபக்தியுடனும் படிப்பதிலும் அவற்றுக்கு "பயன்" சொல்வதிலும் புலமையாளராக விளங்கியவர்.

கண்டாவளை பிரதேசத்திலுள்ள இந்து ஆலயங்களிற்கான ஊஞ்சல் பாட்டுக்களை எழுதியிருந்தவர். குறிப்பாக தேத்தாவடிப்பிள்ளையார் ஆலயத்திற்கு இவர் எழுதிய ஊஞ்சல்பா சிறப்பானதாக விளங்குகின்றது.

1982 ஆம் ஆண்டு விவசாய அத்தியட்சராக இருந்த "ரஞ்சன் விஜயரத்ன" அவர்கள் கண்டாவளைப்பிரதேசத்தில் அக்காலத்தில் இடம்பெற்றிருந்த சிறுபோக அறுவடை விழாவில் கலந்து கொண்டிருந்த போது பிரதேசம் சார் பெருமை சாற்றுகின்ற வில்லிசை நிகழ்வொன்றை மேடையேற்றி பலரது பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டிருந்தமை அவரது கால கலைசேவையின் பசுமையான நினைவுகளாக ஊரவர் நினைவில் இன்றும் கொள்கின்றனர்.

இராமாயண கதையை கருவாக கொண்டு "இரண்டு வரங்கள்" எனும் பெயரில் காத்தவராஜன் கூத்தின் மெட்டில் வரத்தக்கதாக சிறந்த "மேடை நாடகத்தை" கண்டாவளை, புளியம்பொக்கணை போன்ற பிரதேசங்களில் 1990, 1991 ஆண்டு காலப்பகுதியில் நெறியாள்கை செய்து அரங்கேற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட கூத்து முறைமை ஒன்றினுள் புகுவதற்கு ஆன புதிய மரபினை சிந்தித்து அதில் வெற்றியும் பெற்றவராக விளங்கியவர். அக்காலத்து நாடக ஆசிரியர்கள்,அண்ணாவிகளிடையே இம் முறைமையான கூத்து முறைமையை எதிர்காலத்தில் எவ்வாறு முன்னெடுத்துச் செல்லலாம் என்பதற்கான திறவுகோலாக இவர் கையாண்ட உத்தியானது சிறப்பாக பேசப்பட்டிருந்ததாக துறைசார்ந்தவர்கள் குறிப்பிடுகின்றனர்.

பாடல்களை இயற்றுவதில் கைதேர்ந்தவராக விளங்கிய இவர் குழந்தைப்பாடல்கள், தெய்வீகப்பாடல்கள், மானிடவிடுதலைப்பாடல்கள் என பல வகைப்பாடல்களை எழுதி நிறைய கையேட்டுப்பிரதிகளை வைத்து இருந்தமையை அறியமுடிகிறது. ஆயினும் இவரது எப் பாடல்களும் கவிதைகளும் தனியான நூலாக அச்சேறவில்லை என்பது துர் அதிஸ்டவசமானதே. கண்டாவளை பிரதேசத்தில் பலர் தமிழ் ஆர்வலர்களாயும் , கல்வெட்டுக்களை வடிப்பதிலும் சிறப்பாக இன்றும் உள்ளமை இவரது வழிப்படுத்தலின் வழிவந்தவையே என அறிய முடிவதூடாக அவரது வாழ்நாட் காலப்பகுதியில் அவர் ஆற்றிய கலை, தமிழ் பணியை உணர முடிகிறது.

இவர் 2009 ஆம் ஆண்டு பங்குனி பத்தாம் திகதி உள் நாட்டு இறுதி யுத்த கால பகுதியில் முல்லைத்தீவின் இரட்டைவாய்க்கால் பகுதியில் உயிர் நீத்தமை எமது பிரதேசத்தின் கலை துறை சார் வளர்ச்சிக்கு பேரிழப்பாகவே பிரதேச புலமையாளர்கள் கணிப்பிடுகின்றனர்.

இவர் வில்லுப்பாட்டுக்கள், நாடகங்கள், அமரர் கல்வெட்டுக்கள் என நிறைந்த ஆக்கங்களை பிரதேச பாடசாலை மாணவர்களுக்காகவும் , பிரதேச கலைஞர்களுக்காகவும் அமரத்துவம் அடைந்த பிரதேச வாசிகளுக்குமாக எழுதி குவித்திருந்த இவரது புலமையை அறிய எமக்கு ஏட்டு ஆவணங்களாக சில அமரர் கல்வெட்டுக்களையும் ஊஞ்சற் பா பிரதிகளையுமே இன்று பார்க்க முடிகிறது. இருந்த போதும் அவருக்கு வழங்கப்பட்டிருந்த " கவிஞர் குஞ் சரக்கண்டு" எனும் நாமமே இன்று நிலைபெற்றுள்ளது.

2012 ஆம் ஆண்டு கண்டாவளை பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து கண்டாவளை மகா வித்தியாலயத்தில் எடுத்த பிரதேச கலாசார விழாவின் போது இக்கலைஞனை கௌரவிக்கும் முகமாக அன்றைய விழாவின் அரங்கினை "கவிஞர் குஞ்சரக்கண்டு அரங்கு" ஆக அமைத்து கலைத்தாய்க்கு சேவகம் செய்து யுத்த அனர்த்தத்தில் உயிர் நீத்த பிரதேசத்தின் இக் கலையாளுமையாளனை கௌரவித்து இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் இந்திரதாசன் சுதர்சன்

## நடிப்பு

முரசுமேட்டையில் 1981 ஆண்டு தை மாதம் இரண்டாம் திகதி பிறந்த இக் கலைஞர் தனது 34 வயது வரை மட்டும் வாழ்ந்தவராவார். தனது ஆரம்பக்கல்வியை முரசுமோட்டை புனித அந்தோனியார் ரோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திலும் பின் இடைநிலை கல்வியையும் உயர் கல்வியையும் கிளி/முருகானந்தா கல்லூரியிலும் கற்றவர். முகாமைத்துவ பட்டக்கல்வியை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்திலும் கற்று கொண்டார்.

இளமைக்காலத்திலேயே பாடசாலையில் சகல பேச்சு, கலை நிகழ்வுகளில் பங்குபற்றுவதிலும் அதீத ஆர்வத்துடன் செயற்பட்டதுடன் பல்கலைக் கற்கை காலத்திலும் அதனை தொடர்ந்திருந்தவர். பட்டக்கல்வியின் பின்னர் இவர் கிளிநொச்சி பிரதேச சபையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக அரச சேவையில் இணைந்து சேவை புரிந்து பின் உப அலுவலக பொறுப்பதிகாரியாகவும் விளங்கியவர். சமகாலப்பகுதியிலேயே ஊரியான், கோரக்கன்கட்டு, முரசுமோட்டை பிரதேச சகல பொதுச் செயற்பாடுகளிலும் தனது பிரதிநிதித்துவத்துடன் கூடிய பங்களிப்பினை வழங்கி வந்தவர்.

கோரக்கன் கட்டு புத்தொளி கலாமன்றத்தின் நீண்டகால உறுப்பினராக விளங்கி 2011,2012,2013,2014 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் கண்டாவளை பிரதேச செயலக கலாசார விழாக்களிலும் கலாசார விழிப்புணர்வு சார் சுமார் இருபத்தைந்துக்கு மேற்பட்ட நாடக, வீதி நாடக ஆற்றுகைகளிலும் இவ் கலைஞன் நடிப்புத்திறனை பல்வேறு குணச்சித்திர பாத்திரங்களுடாக நடித்து நிலைநிறுத்தியவர். பிரதேச மக்கள், பிரதேச கலைஞர்களிடையே நீங்கா இடம் பிடித்திருந்தவராக விளங்கியதுடன் நாடக ஆற்றுகைகளில் தந்தையாக, மாணவனாக, குடிகாரனாக, ஆசிரியராக, சமூக சீர்திருத்தவாதியாக, வைத்தியராக, கடைக்காரனாக, கட்டிளமைப்பருவத்தினனாக என பல்வேறு பாத்திரங்களை தாங்கி நாடக ஆற்றுகைகளின் சமகாலத்திலையே நடிக்கும் திறன் இவருக்கே உரிய விசேட திறன் எனலாம். பிரதேச நாடக நெறியாளர்கள் " சுதர்சனிடம் எந்த ஒரு பாத்திரத்தினையும் நடிக்க கொடுக்கலாம்" எனும் மனநிலையை கொண்டிருந்தமையை எம்மால் நேரடியாகவும் பல தடவை அவதானிக்க கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடும்பஸ்தனாக இருந்தபோதும் தான் சார்ந்து வாழ்ந்து வரும் பிரதேச மக்களின் கலாசார, கல்வி, பொருளாதார அபிவிருத்திகளிலும் பொது பணியாளனாகவும் திகழ்ந்தவர். எந்த வேலைகளிலும் சரியான முகாமையை பின்பற்றி திட்டங்களை முன்னெடுப்பதும் பொது அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவதும் இவரது தனித்துவத்தை காட்டும் குணாம்சமாகும்.

முரசுமோட்டை விளையாட்டுக்கழகத்தின் தலைவராகவும், முரசுமோட்டை இளையோர் மன்றம், கோரக்கன்கட்டு புத்தொளி கலா மன்றம் போன்றவற்றின் சிரேஸ்ட உறுப்பினராகவும், முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் மன்றச் செயலாளராகவும் தனது இறுதிக்காலம் வரை செயற்பட்டிருந்தார்.

பல்துறைசார் பேச்சாளுமை, நடிப்பு, பொதுப்பணியில் சிறந்த இவர் துர் அதிஸ்டவசமாக கடந்த 25 ஆம் திகதி மார்கழி மாதம் பரந்தன் சந்திக்கு அண்மையில் ஏற்பட்ட வீதி விபத்தில் அகால மரணத்தை தழுவியமை எமது பிரதேசத்திற்கு குறிப்பாக கலைத்துறை மற்றும் பொதுத்துறை சார் அமைப்புகளிற்கும் பேரிழப்பாகவே அமைந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.சி.கு.இராசையா (கண்டாவளைக் கவிராஜர்) மரபுக்கவிதை

ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தெட்டாம் ஆண்டு வைகாசி மாதம் பதினைந்தாம் திகதி கண்டாவளையில் பிறந்த இவர் முரசுமோட்டையில் வாழ்ந்து வரும் எம் பிரதேச மூத்த கலைஞராவார். இவர் தனது ஆரம்ப, உயர் கல்வியை கிளி/கண்டாவளை மகா வித்தியாலயத்திலே கற்றிருந்தார்.

"கண்டாவளைக் கவிராஜர்" எனும் புனை பெயரில் மரபுக்கவிதை எனும் ஆக்கத்துறையில் காலடி வைத்தவர். இயற்கை வர்ணனைகள், தெய்வீகம், பிரதேச வளங்களின் சிறப்புக்கள், கிராமிய உணர்வுகள் போன்றவற்றை தனது கவிதைகளில் பாடுபொருளாகக் கொண்டு பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதி வந்தார். இவரது முதற் படைப்பாக்கம் 1978 ஆம் ஆண்டு "கண்டாவளை கோணங்குளம் விநாயகர் ஆலயம்" மீது பாடப்பட்டதாகும். இதுவரை சுமார் 20ற்கு மேற்பட்ட கவிதை தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார்.

"கரைச்சிப்பள்ளு", "கந்தக்கோட்ட மான்மீயம்" போன்றன இவருக்கு குறிப்பிடத்தக்க புகழினைத்தேடி தந்த நூல்களாகும். இவரின் "கந்தக்கோட்ட மான்மீயம்" எனும் நூல் இலங்கை அரசின் சாகித்திய விருதை பெற்றமை குறித்தற்குரியதாக விளங்குகின்றது.

அரச சேவையில் நீண்ட காலம் கிராம சேவையாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுக்கொண்டமையால் பல இடங்களின் பிரதேச வனப்பும், இயற்கையையும், மக்களையும் இரசிக்கின்ற தன்மையையும் அவற்றை வைத்து சிறப்பாக கவி படைக்கும் ஆற்றலையும் அவருக்கு தானாகவே கிடைக்க உதவிற்று எனலாம்.

இவர் வவுனியா மாவட்ட தமிழ் சங்க உதவியுடன் சில வெளியீடுகளை வெளியிட்டதுடன் முல்லைமணி, அகளங்கன், யோகேந்திரநாதன் போன்ற மூத்த கவிஞர்கள் மற்றும் எழுத்தாளர்களுடன் இலக்கிய உறவைப்பேணி வருபவராகவும் காணப்படுகின்றார்.

இவரது சேவைக்காக 2010 இல் வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கிளிநொச்சியில் முன்னெடுத்த மாகாண தமிழ் இலக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவிழாவின் போது வட மாகாண "கௌரவ ஆளுநர்" விருதினையும், கலைத்துறையில் சேவையாற்றியமைக்காக மத்திய கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கும் தேசிய மட்ட "கலாபூசண விருதும்" 2011 இல் கண்டாவளைப்பிரதேச கலாசார பேரவையின் "கலைஒளி" விருதும், 2015 இன் நடுப்பகுதியில் தென்மராட்சி தமிழ்ச் சங்கம் இவரது கலைச்சேவைக்காக பொன்னாடை போர்த்தி கௌரவமும் செய்திருந்தமை இவரது விரிந்த புலமைசார் கனதியான சேவைக்கு தக்க சான்றுகளாக விளங்குகின்றன.

இவரது எழுத்துலக பணிபற்றி ஆய்வுசெய்து தமிழ் முதுகலைமாணி கற்கைக்காக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு ஆய்வு ஏடு ஒன்றை குமரபுரத்தை சேர்ந்த திரு.சி.இளந்திரையன் (ஆசிரியர்) அவர்கள் சமர்ப்பித்துள்ளமையானது பிரதேச எழுத்தாளுமைகள் பல்கலைக்கழக உயர்கற்கை வரையும் பயிலத்தக்க தகுதியுடன் உள்ளமையை காட்டுகின்றது.

அண்மைய ஒரு சில வருடங்களாக தனது பிள்ளைகளுடன் தனது முதுமை காரணமாக வவுனியாவில் தோணிக்கல்லில் வசித்துவரும் இவர் எப்போதும் தன் இளமைக்கால இலக்கிய நண்பர் வட்டங்களினுடனான உறவுகளின் ஞாபகங்களை அசைபோடுவதில் தனது காலத்தை செலவழிப்பதாக கூறுகிறார். இவர் ஈழத்து மரபு கவி உலகில் தனக்கென தனியிடத்தை பிடித்திருப்பவராக உள்ளமை சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.முருகேசு செல்லத்துரை

## கூத்து

யாழ்ப்பாண மாவட்டத்தின் மீசாலையில் ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தொன்பதாம் ஆண்டு பிறந்த இக்கலைஞன் அறுபது வருடங்களாக புளியம்பொக்கணையின் நாகேந்திரபுரம் கிராமத்தை வதிவிடமாகக் கொண்ட வர். தனது ஆரம்பக்கல்வியை மீசாலை வீரசிங்கம் வித்தியாலயத்தில் பெற்றுக்கொண்டார்.

இளவயதிலேயே காத்தவராஜன், அல்லி அருச்சுனா, கோவலன் கண்ணகி போன்ற நாடகங்களை ஆர்வத்துடன் பார்ப்பதில் தொடங்கிய இவரது கூத்துக்கலை ஈடுபாடு, பின்னர் அவற்றில் இணைந்து நடிப்பதிலும், அவற்றுக்கான உடுக்கை வாத்தியம், டொல்கி என்பவற்றை வாசிப்பதிலும் தேர்ச்சி பெற்றவராக உருவாக காரணமாயிற்று.

பிரதேசங்களில் இடம்பெறும் பல கூத்து ஆற்றுகைகளுக்கான ஒப்பனைக்கலைஞராகவும் நீண்டகாலம் சேவையாற்றியவர். கண்டாவளை பிரதேச பாடசாலைகளினூடாக 2003 - 2007 வரையான காலங்களில் பல இளம் கலைஞர்கள் கூத்து துறையில் உருவாகவும் இக் காலப்பகுதிகளில் தமிழ்த்தின போட்டிகளின் போது மாணவர்கள் பங்குபற்றுதலுடன் நிகழ்த்தப்பட்ட பல்வேறு கூத்து ஆற்றுகைகளிற்கான பிரதான அண்ணாவியாராக செயற்பட்டு, எமது பிரதேச பாடசாலைகள் கூத்து போட்டிகளில் வெற்றி பெறக்காரணமாய் இருந்தவர்.

2007ஆம் ஆண்டில் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் இடம்பெற்ற கூத்து நிகழ்விலும் தனது முதுமைக்காலத்திலும் பங்கு பற்றுதல்களை வழங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1998இல் இக் கலைஞரின் சேவைக்காக கிளிநொச்சி மாவட்ட தமிழ் சங்கம் பிரதேச கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வின்போது இக் கலைஞனுக்கும் சேவைக்கான கௌரவம் வழங்கியிருந்தது. மேலும் 2012ஆம் ஆண்டில் கண்டாவளை பிரதேச செயலகமும் மற்றும் கலாசார பேரவையாலும் கண்டாவளை மகா வித்தியாலயத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்த பிரதேச கலாசார விழாவின் போது பிரதேச விருதான “கலை ஒளி” விருது இவரது கலைச்சேவைக்காக வழங்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2014 ஆம் ஆண்டில் வடமாகாண கௌரவ முதலமைச்சர் விருதினை வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வவுனியாவில் நடத்திய மாகாண தமிழ் இலக்கிய பெருவிழாவில் வழங்கி கௌரவித்து இருந்தமையும் இவரது கலைப்பணிக்கான கௌரவங்களாய் அமைவன.

எமது பிரதேசத்தில் 2014ஆம் ஆண்டு முதல் "கலைஞர் ஒய்வூதியம்" பெறும் மூத்த கலைஞருள் ஒருவராக இவரினையும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தெரிவு செய்து பிரதேச செயலகமூடாக அவ் நிதி வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது.

இளமைத் துடிப்புடன் இன்றளவும் பழைய இசை நாடக கொப்பிகளை யுத்த அனர்த்தத்தில் கைவிடப்பட்டமையை எண்ணி வருந்துபவராயும், அவ் நாடக பிரதிகளிலுள்ள கூத்து பாடல்களையும் வரிகளின் ஏற்ற இறக்கங்களுக்கிணங்க அடிக்கடி அசை போடுபவராக இருக்கின்ற போதும் உடல் நல தளர்ச்சியால் இன்று வருந்தும் நிலையில் தனது காலத்தை கழித்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.வினாசித்தம்பி வேலாயுதபிள்ளை

## கூத்து

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் தட்டுவன் கொட்டி கிராமத்தில் ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தி இரண்டாம் ஆண்டு மாசி மாதம் ஏழாம் திகதி பிறந்தவர் இக்கலைஞர் ஆவார். 1990 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இடப்பெயர்வுடன் இன்று கண்ணகிநகரினை வதிவிடமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்.

தனது பன்னிரெண்டாவது வயதிலேயே கூத்து , நாடகம், போன்றவற்றை நடிப்பதில் ஆர்வம் காட்டத் தொடங்கியதுடன் இத்துறையில் "சத்தியவான் சாவித்திரி" இசைநாடகமொன்றில் சத்தியவானாக தோன்றியிருந்தது முதல் ஆர்வம் ஏற்பட்டது என குறிப்பிடுகின்றார்.

தட்டுவன்கொட்டி கண்ணகி அம்மன் ஆலய உற்சவ பெரும் பொங்கல் காலங்களில் காத்தவராஜன் , அல்லி அர்ச்சுனா, பவளக்கொடி, கோவலன் கண்ணகி போன்ற இசை நாடக ஆற்றுகைகளின் போது முதன்மை பாத்திரங்களை அலங்கரித்தவர்.

மரபு வழியாக அண்ணாவிமார்களிடமிருந்து கூத்தைப்பழகிய தன்மையால் இவர் இயல்பான அடக்கமும் பொறுமையும் தன் பக்க கலைசார் தேவைக்கான நிலமைகளை மிகவும் சாதுரியமாக எடுத்துரைப்பதும் தன்னில் இளையோரிடமும் கற்றோருக்கும் தனது வயதிற்கும் மீறிய தயவினை வழங்கும் பண்பு அவருடன் பழகுவோரை மிகவும் கவர்ந்ததுவிடும்.

தனது முதுமையினை காரணமாகக் கூறி ஒரு பொழுதேனும் பிரதேசத்தில் இடம்பெறும் எந்த கலாசார நிகழ்வுகளையோ, விழாக்களையோ, பேரவையின் கூட்ட அழைப்புக்களையோ தவிர்க்காத நல்ல பண்பான முதுகலைஞனாக இவரை இனம் காண முடிகின்றது.

ஊரவர்களால் "வேலா ஐயா" என அழைக்கப்படும் இக் கலைஞன் இன்றும் காத்தவராஜன் கூத்தின் "முற்று காத்தான்" கட்டங்களை சுவையுடனும் துடிப்புடனும் நடித்து காட்டுபவராக விளங்குகின்றார். "காப்பு" கட்டி வருடா வருடம் பிரதேசத்தின் கண்ணகி அம்மனுக்கு கூத்து பழக தொடங்கிவிட்டால் ஊரிலையே அசைவ உணவு முன்னர் ஒருவரும் உண்பதில்லை; எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும் இவர் அவ்வாறு உண்டவர் யாரேனும் கோவில் வளாகம் அன்றி கூத்து பழகும் இடம் வரின் அவருக்கு வழித்தடங்கலோ அன்றி கூத்து பழக்கத்தில் இடையூறுகளோ அன்றி துர்செய்திகளோ வந்துவிடும்; என பயபக்தியுடன் கூறுகிறார்.

கண்ணகி தெய்வத்துக்கு நேர்த்தி அடிப்படையிலேயே கூத்து ஆற்றுகை வைகாசிப் பொங்கல் காலத்தில் எடுப்பதால் கூத்து ஆடும்போதும் பாடல்களை பாடுகின்றபோதும் இளவயது பழக்கத்தின் காரணமாக அவரிடம் சந்தித்து பழைய ஞாபகங்கள், அனுபவங்களை பகிர்கின்றபோது, கூத்துப்பற்றி பேச்சு எடுத்தால் "தம்பி இன்று மச்சம் சாப்பிட்டன்! குறை நினையாதிங்கோ; பாட மாட்டன்". என்று குழைந்து விடும் பாங்கு எம்மை நெகிழவைத்து விடும். கடந்த மூன்று ஆண்டுகளாக மனைவியின் இறப்பின் பின் தனது பிள்ளைகளுடனேயே வாழ்ந்து வருகின்றார்.

தனது இளமைக்காலத்தில் பெரும் பகுதியை கூத்துக்கலைக்கே அர்ப்பணித்து இருந்த இவரது சேவையை கௌரவித்து 2010 ஆம் ஆண்டில் வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கிளிநொச்சியில் நடாத்திய தமிழ் இலக்கிய விழாவின் போது கௌரவ "ஆளுநர் விருதினையும்", 2011 ஆம் ஆண்டில் கண்டாவளை பிரதேச கலாசார பேரவை பிரதேச செயலகத்துடன் தருமபுரத்தில் இணைந்து நடத்திய பிரதேச கலாசார விழாவில் "கலை ஒளி" விருதினையும் வழங்கி கௌரவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

எமது பிரதேசத்தில் வறிய மூத்த கலைஞர்களுக்காக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வழங்கிவரும் ஒய்வூதிய திட்டத்தில் 2014 ஆம் ஆண்டு முதல் தெரிந்து எடுக்கப்பட்டு பிரதேச செயலகமூடாக ஓய்வூதியம் பெற்றுவரும் கலைஞராகவும் இவர் விளங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.கார்த்திகேசு முருகேசு

## கூத்து, பண்ணிசை

கண்டாவளை, வண்ணாபிட்டியில் ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து மூன்றாம் ஆண்டு பிறந்த இக்கலைஞர் இன்றுவரை ஆவரஞ்சாட்டியில் வாழ்ந்து வருகின்றார். "வல்லிபுரம் ஐயா" என அழைக்கப்படும் இவர் நான்காம் வகுப்பு வரை தன் கல்வியை கிளி/கண்டாவளை மகா வித்தியாலயத்தில் கற்றுக்கொண்டவர். பின்னர் இவர் விவசாயத்தை செய் தொழிலாக்கி கொண்டார்.

இளவயது முதலே கூத்தில் ஆர்வம் கொண்டவராக விளங்கிய இவர் இசை நாடகம், உடுக்கடித்தல், கூத்து நடிப்பு, பண்ணிசை பாடலிலும் ஈடுபாடு காட்டி வந்தவர். இவரது கலைவாழ்வு பதின் நான்காவது வயதில் கண்டாவளை கொம்படியம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற "பவளக்கொடி" நாடகத்தில் அருச்சுணனாக நடித்ததை தொடர்ந்து ஆரம்பமாயிற்று .

இவர் தொடர்ந்து பிரதேச ஆலயங்களில் குறிப்பாக கொம்படியம்மன், கொக்கு இறகு கட்டிப்பிள்ளையார், கோணங்குளம் கற்பகபிள்ளையார், மல்லிகை அம்மன் ஆகிய ஆலயங்களில் இடம்பெற்ற நாடக, கூத்து ஆற்றுகைகளிலும் பல தடவை நடித்துள்ளமையை அவருடனான பகிர்வினூடாக அறிய முடிகிறது.

"அல்லி அருச்சுணா" இசை நாடகத்தில் அருச்சுணனாகவும் "சத்தியவான் சாவித்திரி" நாடகத்தில் "சத்தியவானாகவும் என பிரதான பாத்திரங்களை அலங்கரிப்பதில் ஆர்வத்துடன் பலதடவை பங்கெடுத்தவர். மேலும் "வரத மனோகரி" எனும் சினிமாப் பாணியிலான நாடகத்திலும் நடித்துள்ளார்.

இவர் வரணியை சேர்ந்த வேலுப்பிள்ளை அண்ணாவி, மாசார் அண்ணாவி போன்றோர்களிடம் இளமைக்காலத்தில் கூத்துக்களையும், இசை நாடகங்களையும் பயின்று நிறைந்த அனுபவத்திற்கு சொந்தக்காரராக விளங்குகிறார்.

கலைப்பணிகளிற்கு அப்பால் இன்று பல பிரதேச ஆலயங்களிற்கும் ஓதுவாராக பணியாற்றும் இவர்; வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தில் வருடா வருடம் இடம்பெறுகிற "ஏடு படிக்கும் நிகழ்விலும்" அதாவது தனிக்குற்றெழுத்திடாத ஓலை சுவடிகளில் எழுதும் பழைமையான தூய இலக்கணவரி வடிவங்களை நேர்த்தியாக புரிந்து வேகமாக வாசிக்கும் புலமையாளருள் ஒருவராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியவர்.

இன்று முதுமையின் காரணமாக கண்பார்வை வலுக்குன்றி வருவதால் ஏடு படிக்கும் நிகழ்வுகளில் படிக்கமுடியாவிடினும் கலந்து வருவதாக குறிப்பிடும் இவர், தன் இளமைக்கால கலைவாழ்வுதனை பிறருடனும் எம்முடனும் லாவகமாக பகிர்ந்து கொள்வதிலும், இனிய இசையுடன் கூடிய குரல் வளத்துடன் பாடல்களை மீட்டுவதிலும் சிறப்பான ஆட்டங்களை ஆடிக்காட்டுவதிலும் பேருவிருப்புடன் ஈடுபடும் இயல்புடையவர். இவை அவரது இளமைக்கால கலைவாழ்வின் மாறாத பிரதிபலிப்பாக உள்ளமையை அறியமுடிகின்றது.

இவ் உரிய கலைவாழ்விற்கு சொந்தக்காரரான இவ் முதுகலைஞனுக்கு 2013 ஆம் ஆண்டில் பிரதேச செயலகமும்,கண்டாவளை பிரதேச கலாசார பேரவையும் இணைந்து பரந்தனில் நடாத்திய பிரதேச கலாசார விழாவின் போது "கலைஒளி" விருதினை வழங்கி கௌரவித்திருந்தது. அத்துடன் 2014 ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்ட செயலகமும் மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் கலைச் சேவைக்காக "கலைக்கிளி" விருதினையும், அதே ஆண்டிலேயே கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நாடு தழுவிய ரீதியாக வழங்கப்படுகிற கலைஞருக்கான தேசிய விருதான "கலாபூசண" விருதினையும் வழங்கி கௌரவித்து இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.முருகர் குணபாலசிங்கம்

## கூத்து

இவர் தட்டுவன்கொட்டியில் ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து மூன்றாம் ஆண்டு சித்திரை மாதம் ஆறாம் திகதி பிறந்து கண்ணகிநகரில் தற்போது வசித்து வருகின்றார். தனது ஆரம்பக்கல்வியை கிளி/ஆனையிறவு சிங்கள தமிழ் கலவன் பாடசாலையில் கற்றுக் கொண்டவர்.

பிரதேசத்துக்கே உரிய இயல்பான கூத்து சார் ஈடுபாடு இவரையும் தொற்றிக் கொண்டதால் திரு.சின்னத்தம்பி அண்ணாவி மற்றும் குருநகரை சேர்ந்த கிறிஸ்தோபர் அண்ணாவி போன்ற அக்காலத்தில் புகழ் பெற்று இருந்த அண்ணாவிமார்களுடன் கூத்து கலையை விருப்புடன் பயின்றவராகவும் இக் கலைஞர் விளங்கினார்.

பிரதேச ஆலயமான தட்டுவன்கொட்டி பிள்ளைமட கண்ணகி அம்மன் ஆலயத்து பெரும் பொங்கல் உற்சவத்திற்காக ஊர் கூடி பழகும் கோவலன் கூத்தில் நீண்ட காலம் "காத்தான்", "சின்னான்", "காளி", "விஷ்ணு" என பல பாத்திரங்களில் நடித்தும் சில கட்டங்களை ஆற்றுப் படுத்தியிருந்தவராகவும் விளங்குகிறார்.

இவர் ஆரம்ப காலத்தில் "தட்டுவன்கொட்டி அம்பாள் கலாமன்ற" உறுப்பினராய் இருந்தும் கூத்து ஆற்றுகைகளில் உடுக்கடித்தல், பக்கப்பாட்டு பாடுவதிலும் ஈடுபட்டிருந்தார்.

தற்போது முதுமையின் காரணமாக சற்று கலைச் சேவையிலிருந்து ஒதுங்கி வாழ்ந்து வருகின்ற போதும் எமது பிரதேச பழைமையான கலையாளுமைகளில் ஒருவராகவே இவரை நோக்க முடிகிறது.

இவரது கலைவாழ்வினை கௌரவிக்கும் முகமாக 2011 ஆம் ஆண்டில் கண்டாவளை பிரதேச கலாசாரப்பேரவையும் பிரதேச செயலகமும் இணைந்து கிளி/ தருமபுரம் மகா வித்தியாலயத்தில் நடத்திய முதலாவது பிரதேச கலாசார விழாவின் போது "கலை ஒளி" விருதினை வழங்கி இருந்தமை குறிப்பிடதக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.கார்த்திகேசு நித்தியானந்தன்

## பண்ணிசை, புராணபடனர்

ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தேழாம் ஆண்டு ஐப்பசி மாதம் பதினேழாம் திகதி புங்குடுதீவில் பிறந்த இவர் தனது ஒன்பதாவது வயது வரை ஆரம்பக் கல்வியை புங்குடுதீவு பராசக்தி வித்தியாலயத்தில் கற்றுக் கொண்டவர். 1956 இல் எமது பிரிவின் சேற்றுக்கண்டி கிராமத்தில் குடிபெயர்ந்து வசித்து வரும் இவர் விவசாயத்தை தொழிலாக கொண்டவர். கமலாம்பிகையை துணைவியாக கொண்டு வாழ்ந்துவரும் இவர் தனது வாழ்வின் அதிக காலப்பகுதியை முரசுமோட்டை சேற்றுக்கண்டி முத்துமாரியம்மன் ஆலயத்தில் சமயப்பணி ஆற்றுவதிலும் ஓதுவாராக தொழிற்படுவதிலுமே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

இவ்வாலயத்தின் முழுநேர தொண்டனாகவும் நிர்வாகத்தின் ஆலோசகராகவும் விளங்கும் இவர் சிறுவயதில் புங்குடுதீவிலுள்ள ஆலயங்களில் ஊர்ப்பெரியவர்கள் புராணப்படிப்பிலீடுபடும் வழக்கத்தில் தானும் ஈடுபாடு காட்டியவர். இதனால் அக்காலப்பரப்பில் திருவிளையாடல் புராணம், பெரிய புராணம், கந்த புராணம் ஆகியவற்றை விரும்பி பயின்றிருந்தமையானது முரசுமோட்டையில் அம்மன் சந்நிதியுடன் பின்னர் இணைந்தமைந்த வாழ்வு, புத்துணர்வுடன் கூடிய முழுமையான ஈடுபாட்டுடன் அவற்றை பயில்வதற்கும் படிப்பதற்கும் ஏனையோர்க்கு பயிற்றுவதற்கும் ஏற்ற வாய்ப்பினை வழங்கியது எனலாம்.

பிரதேச மக்களிடையே இந்து சமய, அறநெறிப்பழக்க வழக்கங்களை நெறிபுரளாது பின்பற்றுவதற்காக உழைத்து வருகின்றார். இந்த வகையில் அம்மன் ஆலயத்தில் தினசரி பூசைகளின் போது தேவார திருமுறைகளை நேர்த்தியாக இசைத்தும் திருத்தொண்டர் புராணத்தை ஓதியும் வருகின்றார்.

வருடத்தில் ஒருதடவை இருபத்தொரு நாட்கள் தொடர்ந்து திருவாசக முற்றோதலில் ஈடுபட்டு பயன் சொல்வதும், பிரதி வெள்ளிக் கிழமைகள் தோறும் பண்ணிசை, பஜனை நிகழ்வுகளை நேர்த்தியாக அடியவர் ஒத்துழைப்பு பெற்று நடத்தி வரும் அரிய சேவையை நீண்ட காலமாக கைக்கொண்டு வருகின்றார்.

நாயன்மார்களின் குருபூசை தினங்களின் போது அவர்களால் அருளிச் செய்யப்பட்ட சகல திருமுறைப்பாக்களையும் அவ்அவ் தினங்களில் கிரமமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றோதுவதும் என இவரது ஓதுவார்பணி ஓய்வின்றி இன்றளவும் சுமார் முப்பது வருடங்களுக்கு மேலாக சேற்றுக் கண்டி கிராமத்துள்ளும் அதை தாண்டியும் ஒலித்துக் கொண்டிருப்பது சிறப்பு.

இவரது சமயப்பணியுடன் கூடிய ஓதுவார் சேவையை கௌரவிக்கும் முகமாக 2013 ஆம் ஆண்டு பிரதேச கலாசார பேரவையும் கண்டாவளை பிரதேச செயலகமும் பரந்தன் பகுதியில் இணைந்து நடாத்திய கலாசார விழாவில் "கலை ஒளி" விருது வழங்கி கௌரவித்து இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.நாராயணி சிவபாக்கியநாதன்

## நடிப்பு

ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பதாம் ஆண்டு வைகாசி இரண்டாம் திகதி பிறந்த இவர் பூநகரியை பிறப்பிடமாக கொண்டவர். இக் கலைஞர் இன்று கல்மடு நகர் கிராமசேவகர் பிரிவின் நாவல் நகரினை வதிவிடமாக கொண்டு வாழ்ந்து வருகிறார். சிறந்த நாடக கலைஞரான இவர் தமது ஆரம்பக் கல்வியை கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கற்றுக்கொண்டார்.

இவரது தந்தையாரும் ஒருநாடக கலைஞராக விளங்கியமையால், அவரின் வழியில் நாடக கலையின் மீது தான் ஆர்வம் காட்டத்தொடங்கியதாக குறிப்பிடுகிறார். இவர் தனது தந்தையார் இசைநாடகங்களில் "இயமன்" வேடம் தாங்கி அதிகம் நடிப்பதால் பிரதேசத்தவர்களினால் "இயமன் நாராயணி" என பட்டபெயரை அவருக்கு சூட்டியிருந்தனர்; என குறிப்பிடுகிறார்.

நாடக கலை அனுபவத்தை தான் அரியாலையை சேர்ந்த சிவசுந்தரம் மாஸ்ரரிடமும் திருவையாற்றைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அஞ்சலதிபரான திரு. நா.யோகேந்திரநாதனிடமும் இரத்தினபுரத்தைச்சேர்ந்த செ.கணேசநாதன் ஊடாகவும் பெற்றுக்கொண்டதாகக் குறிப்பிடுகின்றார்.

மேடை நாடகங்களிலும், வீதி நாடகங்களிலும் சமூக விழிப்புணர்வு ஆற்றுகைகளின் போதும் அதிகம் நகைச்சுவை பாத்திரங்களை நடிப்பதில் தேர்ச்சி பெற்றவராக விளங்குகின்றார்.

இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களை நடித்த இவர் "பண்டாரவன்னியன்", "நண்பனா நீ" போன்ற நாடகங்களிலும் 1965 இல் "புதுவாழ்வு", "அம்புக்குச் சொல்லாதே" போன்ற சமூக நாடகங்களிலும் மன்னார் மாவட்ட உயிலங்குளம் பகுதியில் பதினைந்து வயதில் பெண் பாத்திர வேடமிட்டு நடித்தது முதல் தனது கலை பயணம் ஆரம்பமாயிற்று; என ஆரம்ப கால அனுபவங்களை மீட்டுகின்றார்.

இவர் தொடர்ந்து "கடுக்கன் கனகலிங்கம்" எனும் நகைச்சுவை நாடகத்தில் "புறோக்கர்" வேடத்தில் உயிலங்குளப்பிரதேசத்தில் நடித்து பாராட்டுக்களைப் பெற்றமையும் 1979ஆம் ஆண்டில் பரந்தன் பகுதியில் "காணிவெல்" ஒன்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே நாடகம் மீள மேடை கண்டு அனைவராலும் அக்காலத்தில் சிறப்பாக பேசப்பட்டமை பற்றியும் 1969 காலப்பகுதியில் கலாநிதி மாசிலா மணியின் "ஸ்டார் நாடக மன்றத்தால்" "கண்ணன் காட்டிய வழி" எனும் நாடகம் கிளிநொச்சி ரொட்றிக்கோ மைதானத்தில் ஆற்றுகை செய்தபோது "விதுரர்" பாத்திரத்தையும் தாங்கி நடித்தமை பற்றியும் அசைபோடுகின்றார்.

தான் நடித்த காலங்களில் குறிப்பாக நகைச்சுவை நாடகங்களான "டுபாய் மாப்பிளை" ,"இவரா மாப்பிள்ளை", "சிங்கப்பூர் வேலைக்காரன்" போன்றவற்றில் இராமநாதபுரத்தை சேர்ந்த ரகு எனப்படும் பாலன் மற்றும் பா.செல்வம் ஆகியோருடன் இணைந்து வவுனியா, நெலுக்குளம், இராமநாதபுரம், கிளிநொச்சி போன்ற இடங்களில் 1990 காலங்களில் நடித்து புகழ் பெற்றிருந்ததாகவும் தம் குழுக்களின் நாடகங்களை மேற்குறித்த பிரதேசத்தவர்கள் விரும்பிப் பார்க்கின்ற மனப்பாங்குடன் இருந்தனர் எனவும் குறிப்பிடுகின்றார்.

1995 காலப்பகுதியில் இலங்கைத்தீவின் வடபுலமெங்கும் "விடுதலையின் வித்துக்கள்" எனும் வீதி நாடகத்தை பரவலாக ஆற்றுகை செய்தமையும் 1995 தொடக்கம் 1996 வரை காலத்தில் "சமுதாயக் கோடுகள்" எனும் நாடகத்தில் "விவாக பதிவாளராக" சர்வதேச மகளீர் தினத்தை ஒட்டி பல பகுதிகளில் நடித்து தன் ஆற்றுகையூடாக பலரது பாராட்டுக்களையும் பெற்று நன்கு பிரதேச நாடகக்கலைஞர்களால் அறியப்பட்டவராக விளங்குகின்றார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடத்தின் நாடக துறையினைச் சேர்ந்த கலாநிதி சிதம்பரநாதன் விரிவுரையாளரூடாகவும் தற்போது முன்பள்ளிக்கான உதவிக்கல்விப்பணிப்பாளராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் சேவையாற்றி வருபவரும் சிறந்த நாடகநெறியாளருமான திரு.செ.விந்தன் அவர்களினூடாகவும் நாடக, அரங்க ஆற்றுகைகள் தொடர்பான நுட்பங்களை நிறையவே பெற்றதாக குறிப்பிடும் இவர் மேற்குறித்த ஆசிரியர்களுடன் "முடிசூடிக்கொள்வோம் வாரீர்" எனும் சமூக விழிப்புணர்வு நாடகத்தை பயின்று நடித்த காலங்கள் மிகவும் மகிழ்வான காலங்களாக குறிப்பிடுகின்றார். கல்மடுநகர் பிரதேசத்தில் அக் காலத்தில் இயங்கிய மன்றமான "கலைவாணர் நாடக மன்றத்தில்" 1965 - 79 காலப்பகுதில் அதன் பொருளாளராக செயற்பட்டவர். அதன் செயற்பாடுகள் உள்நாட்டு குழப்பத்தில் இடைநடுவே வலுவிழந்த போதும் தற்போது அதனை மீள செயற்படுத்த பிரதேச கலைஞர்களையம் ஆர்வலர்களையும் இணைக்கவும் அதற்கான பொருளாதார வலுவையும் எதிர்பார்த்தவாறு தனது முயற்சியில் ஈடுபட்டு வருவதை காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.சின்னத்தம்பி கனகராசா
## ஆர்மோனியம்

ஆயிரத்துதொள்ளாயிரத்து ஐம்பத்து ஐந்தாம் ஆண்டு ஆனி மாதம் பதின் ஐந்தாம் திகதி யாழ்ப்பாணத்தின் வரணி கிராமத்தில் பிறந்த இக்கலைஞர் ஆஸ்பத்திரியடி, கண்டாவளையை நிரந்தர வதிவிடமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார். தனது வித்தியா ஆரம்பத்தை யா/வரணி சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்றுக் கொண்டார்.

ஆர்மோனியம், ஓர்கன், மெலோடிக்கா, எக்கோடியன் என சகலவிதமான கட்டை வாத்தியங்களையும் சாஸ்திர ரீதியாக கற்றுத்தேறிய ஒருவராக எமது பிரதேசத்தில் வாழ்ந்து வரும் இவர், தான் கட்டை வாத்தியங்களைக் கையாளும் திறனை அச்சுவேலியைச் சேர்ந்த ஆர்மோனிய வித்துவான் "பிலிப்" அவர்களிடமும் "ஜோன் ஹவாஸ்" அவர்களிடமும் கற்று தேறியதாக குறிப்பிடுகின்றார்.

கண்டாவளைப்பிரதேசம் மட்டுமன்றி கிளிநொச்சி, பளை, இயக்கச்சி, மாசார், என பலபிரதேசங்களிலும் இடம்பெறும் இசை, நாடகக்கூத்து நிகழ்வுகளான சத்தியவான் சாவித்திரி, அல்லிஅருச்சுணா, பவளக்கொடி, காத்தவராஜன் போன்ற சம்பூர்ண ஆற்றுகைகளிற்கான பிரதான பின்னணி ஆர்மோனிய இசை மீட்டும் கலைஞனாகவும், சமகாலத்திலேயே சிறந்த குரல்நயம் மிக்க பக்கப்பாட்டுக்காரராகவும் நீண்டகாலமாக செயற்பட்டு வருகின்றார்.

இவரது விரல்கள் மீட்டும் இசை ஒலியில் பிரதேசத்தின் பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் இடம்பெறும் அனேக கூத்துக்களும், கலை நிகழ்வுகளும் செழுமை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவர் கண்டாவளை முத்தமிழ் கலாமன்ற மூத்த உறுப்பினருள் ஒருவராக விளங்குவதுடன், கண்டாவளை பிரதேச கலாசார பேரவை மற்றும் மாவட்ட பண்பாட்டுப்பேரவையின் உறுப்பினராகவும் தற்போது விளங்கி, பிரதேசத்தின் கலைச்செயற்பாடுகளுக்கு தனது முழு ஆதரவையும் வழங்கி வருவது சிறப்பானதாகும்.

**2011 முதல் 2015ஆம் ஆண்டுகள் வரையான காலத்தில் கண்டாவளை பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடாத்தியிருந்த**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து பிரதேச கலாசார விழாக்களிலும் இவரது ஆர்மோனிய இசையானது கோவலன் கண்ணகி, "காத்தவராஜன் கூத்து", "கர்நாடக இசை விருந்து", "வில்லிசைப்பாட்டு", "சமூக நாடகம்" போன்ற ஆற்றுகைகளூடாக மன்றில் ஒலித்திருந்தது. இவை சிறப்பான இவரது பிரதேச கலைச்செயற்பாடுகளுக்கு வழங்கிவரும் ஒத்துழைப்பை காட்டுகின்றது.

வன்னிப்பிரதேச கூத்து பயிற்றுவிக்கின்ற அண்ணாவிமார்களினால் கனகராசா அண்ணரின் "பெட்டியை" (ஆர்மோனியத்தை கூறுவது) தான் தாம் பழக்கங்களுக்கும் இறுதி ஆற்றுகைகளுக்கும் விரும்பிப் பிடிப்பதும், அவரின் ஆர்மோனியம் மீட்டும் மெட்டிலேயே தாம் "கொப்பிகள்" இல்லாமலே கூத்துப் பாட்டுக்கள் மனதில் பதிவாகி விடுவதால் அவற்றை ஆற்றுகையில் தடையின்றி படிக்க முடிகிறது என்பர், போட்டிப் போட்டு அவரை தம் பழக்கங்களுக்கும் ஆற்றுகைகளுக்கும் அழைத்து செல்வர். இவை எம்மாலும் கண்டுக் கொண்ட நல்ல அனுபவமாகிறது.

இவரது சிறந்த கலைச் சேவையை கௌரவித்து 2011 ஆம் ஆண்டில் பிரதேச கலாசாரப் பேரவை பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்திய கலாசார விழாவின் போது "கலைஒளி" விருதினையும் அதே ஆண்டிலே மாவட்ட பண்பாட்டுப் பேரவை "கலைக்கிளி" விருதினையும் வழங்கியிருந்தது.

2014 ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களம் கலைஞர்க்கான தேசிய மட்ட உயர் விருதான "கலாபூசண" விருதையும் வழங்கியிருந்தமை சிறப்பான அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்வி நடனவதி முருகேசு

## இசை

ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து மூன்றாம் ஆண்டு ஆடி மாதம் பதினைந்தாம் திகதி அனுராதபுரத்தில் பிறந்த இவர் தனது எட்டு வயதிலிருந்து தருமபுரம் கிழக்கில் வசித்து வருகின்றார். ஓய்வு பெற்ற இசை ஆசிரியரான இவர் தனது சேவைக் காலத்தில் துறைசார் நிகழ்வுகளினை நெறியாள்கை செய்தும் அவற்றில் பங்குபற்றியும் பிரதேசத்தில் மட்டுமன்றி மாவட்ட ரீதியாகவும் புகழ் மிக்க ஆசிரியராக விளங்கியவர்.

வட இலங்கை சங்கீத சபையின் சகல தர பரீட்சைகளிலும் முதன்மை சித்திகளுடனும், இசைத்துறைக்கான டிப்ளோமா உயர் கற்கைநெறியையும் பூர்த்தி செய்தவர். இவர் இசைத்துறை சார் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திப் பயிலரங்குகளில் பங்குபற்றுனராகவும் பயிற்றுவிக்கும் வளவாளராகவும் நீண்டகாலம் சேவையாற்றியவர்.

மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் உயர் டிப்ளோமா கற்கைநெறியை பயின்ற காலத்தில் (1974-1977) திருக்கேதீஸ்வர திருவிழாக் கால "பண்ணிசைக் குழுவின்" பிரதான உறுப்பினராக விளங்கியதாக குறிப்பிடும் இவர், 2008 இல் தனது ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்தவர்.

2003,2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தருமபுரம் நெத்தலியாறு முத்து விநாயகர் ஆலய அறநெறி பொறுப்பாசிரியராக சேவையாற்றி சிறப்பாக பண்ணிசை வகுப்புக்களையும் கூட்டுப் பிரார்த்தனைகளையும் ஒழுங்கமைத்து பிரதேச சிறார்களுக்கு வழங்கி பணியாற்றியிருந்தவர்.

2011 ஆம் ஆண்டு முதல் செயற்பட தொடங்கிய பிரதேச கலாசார பேரவையின் ஆரம்ப கால உறுப்பினராக விளங்கும் இவர், பிரதேச மட்ட, மாவட்ட மட்ட தேசிய கலை இலக்கிய போட்டிகளின் போது நடுவராகவும் செயற்பட்டு வருகிறார். பிரதேசம் சார் இசை நிகழ்வுகள் மற்றும் கலை செயற்பாடுகளுக்கு தக்க ஆலோசனைகளையும் தனது அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்பையும் பொறுப்புணர்ந்து வழங்கி வருவதில் எப்போதும் பின்னிற்பதே இல்லை. என்பதே இவரது விசேட குண இயல்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் இசைத்துறை சார் அனுபவங்களை இளைய சமூகத்தவர்களுக்கு கையளிக்க வேண்டும் என்பதில் தீராத ஆர்வமுடையவராகவும் விளங்கும் இவர் தற்போதைய இளைய சமூகம் கல்விக்கான அவசர உலகில் கலைத்துறையில் ஆர்வத்தை காட்டுவதில் ஈடுபாடு குறைந்து வருவது கவலையளிப்பதாக ஆதங்கம் கொள்பவராகவும் இருக்கிறார்.

இவர் 2014,2015 ஆம் ஆண்டுகளில் பிரதேச கலாசார விழாக்களின் போது கர்நாடக இசை நிகழ்வுகளை பிரதேச இளையவர்களுக்கு நேர்த்தியுடன் பழக்கி அவற்றை ஆற்றுகை செய்து பாராட்டுக்களை பெற்றிருந்தவர்.

இயல்பாகவே அமைதியான சுபாவமும், கனிவான பேச்சும், புன்னகையும் உடைய இவர் தான் எடுக்கின்ற எந்த ஓர் பொறுப்பையும் திறம்பட நிறைவேற்றுவதில் சமர்த்தராக விளங்குகின்றார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்ப காலத்தில் சாஸ்திர ரீதியாக இசையை பயின்று இன்றளவும் தனது அரச பணியின் பின்னரும் கலைச்சேவைக்காக சேவையாற்றும் முது ஆளுமைகளில் ஒருவராக விளங்குபவர்.

இவரது சேவையை கௌரவித்து, 2011ஆம் ஆண்டு கண்டாவளை பிரதேச கலாசார பேரவை “கலை ஒளி” விருதினையும் 2014ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்ட செயலக பண்பாட்டு பேரவை “கலைக்கிளி” விருதினையும் வழங்கியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமதி ரதிதேவி கந்தசாமி (தாமரைச்செல்வி)

## சிறுகதை

ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து மூன்றாம் ஆண்டு ஆவணி மாதம் நான்காம் திகதி குமரபுரத்தில் பிறந்த இவர் "தாமரைச்செல்வி" எனும் புனைபெயரில் உலகறிந்த சிறுகதை படைப்பாளியாக இன்று பேசப்படுகின்றார்.

இவர் ஆரம்பக்கல்வியை பரந்தன் இந்து மகா வித்தியாலயத்திலும் இடை நிலைக்கல்வியை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியிலும் கற்றவர். 1973 களில் இலங்கை வானொலி நிகழ்ச்சிகளுக்காக எழுத தொடங்கியவர். இவரது முதலாவது சிறுகதையான "ஒரு கோபுரம் சரிகிறது" எனும் கதை வீரகேசரியில் 1974 இல் வெளிவந்தது.

இற்றை வரை சுமார் 200 ற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளதாக குறிப்பிடும் இவர் அவற்றுள் "எங்கேயும் எப்போதும்" , "இங்கேயும் சில இழப்புக்கள்", "ஒரு மழைக்கால இரவு" , "இடைவெளி" , "ஓர் உயிரின் விலை" போன்ற கதைகள் வாசகர்களை பெரிதும் கவர்ந்தவை எனக் குறிப்பிடுகின்றார்.

இவரது சிறுகதைகள் சிந்தாமணி, வீரகேசரி, தினகரன், ஈழமுரசு, முரசொலி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளிலும் மல்லிகை, சிரித்திரன், சுடர், களம், நாற்று , தாரகை, ஆதாரம் போன்ற சஞ்சிகைகளிலும் ஐரோப்பிய பத்திரிகைகளான "பரிஸ் ஈழநாடு," "பரிஸ் முரசு", "களத்தீ" (லண்டன்) போன்றவற்றிலும் வெளி வந்துள்ளன. இவரது 4 சிறுகதைகள் ஆங்கில மொழிபெயர்ப்பிலும் வெளிவந்துள்ளன. "கலா வெள்ளி" எனும் கொழும்பினை சார்ந்து வெளிவருகின்ற சஞ்சிகை தீவளவில் நடாத்திய சிறுகதைப்போட்டியில் "அவர்கள் தேவர்களின் வாரிசுகள்" எனும் சிறுகதை முதற்பரிசினை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வன்னிப்பிரதேச சிறுகதைப்படைப்பாளியான இவர் குறுநாவல், நாவல் என்பன எழுதுவதிலும் ஈடுபட்டுள்ளார். இவரது "விண்ணில் அல்ல விடிவெள்ளிகள்" எனும் நாவல் 1997ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் "மீரா வெளியீடாக" வந்ததுடன் யாழ் இலக்கிய பேரவையின் பரிசையும் பெற்றிருந்தது.

இவரது படைப்பான "வீதி எல்லாம் தோரணங்கள்" வடக்கு கிழக்கு மாகாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற சிறந்த நூலிற்கான பரிசினை 2003 ஆம் ஆண்டில் பெற்றிருந்தது. தொடர்ந்து வந்த ஆண்டில் (2004) இவரது பிரபல்யம் மிக்க நாவலான "பச்சை வயல் கனவு" எனும் நாவல் அரச சாகித்திய விருதினையும் தட்டி சென்றமை இவரது படைப்புகளின் தரத்தினை எடைபோடுவனவாய் விளங்கியிருந்தன எனலாம்.

இதுவரை இவர் ஒன்பது சிறுகதைத் தொகுதிகளை வெளிக்கொணர்ந்துள்ளார். இவ் எழுத்தாளரின் எழுத்துலக சேவைக்காக 2001 ஆம் ஆண்டில் கௌரவ "ஆளுநர் விருதும்", 2002 ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தால் "இலக்கிய மணி" பட்டமும், அதே ஆண்டில் இலங்கை கலைக் கழகத்தின் (கொழும்பு) சிறந்த கலை இலக்கிய செயற்பாடுகளுக்கான விருதும் கிடைத்தமை குறிப்பிடத் தக்கது.

எமது பிரதேச கலாசார பேரவையும் பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்தியிருந்த கலாசார விழவின்போது இவரது நீண்டகால எழுத்துலக பணிக்காக 2011 ஆண்டில் "கலைஒளி" விருதும் வழங்கி கௌரவித்திருந்தது.

இவரது எழுத்துலகப்பணிகளை யாழ். பல்கலைக் கழக மட்டத்தில் தமிழ்துறை இளமாணி பட்ட கற்கை மற்றும் முதுகலை மாணி பட்ட கற்கைநெறிகளுக்காக ஆய்வு மாணவர்களால் ஆய்வு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.அப்புக்குட்டி ஐயம்பிள்ளை (பசுந்தரையான்)

## மரபுக்கவிதை,புராணபடனர்

ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து மூன்றாம் ஆண்டு கார்த்திகை மாதம் பத்தாம் திகதி நெடுந்தீவில் பிறந்த இவர் தனது பதினைந்தாவது வயது முதல் பெரியகுளம் பிரிவினை நிரந்தர வதிவிடமாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார். தனது ஆரம்பக் கல்வியை நெடுந்தீவு கிழக்கில் முன்பு இருந்து பின்னர் மூடப்பட்டுள்ளதுமான "இராமநாதர் வித்தியாசாலையில்" பயின்றதாக குறிப்பிடுகிறார்.

தனது தந்தை வழியாக புராணப் படிப்பு, பாட்டுக்குப் பயன் சொல்லல் முறைகளை இள வயதிலே பயின்றதுடன் நெடுந்தீவு றெயிஸ்டார் சுப்பிரமணியத்திடமும் உடையார்கட்டு குமாரசாமிப்புலவர் ஆகியோரிடமும் திருவிளையாடற் புராணம், கந்த புராணம், சிவராத்திரிப் புராணம், ஏகாதசிப் புராணம், பெரிய புராணம் ஆகியவற்றைக் கற்று கொண்டதாகக் குறிப்பிடுகின்றார்.

தமிழ் இலக்கியத்திலும், வெண்பா, விருத்தப்பா ஆகிய யாப்புக்களினூடாக சந்தக் கவிப் படைப்பதில் தேர்ச்சியும் பெற்றிருப்பவராக விளங்குகின்ற இவர் கோவலன் கதை படிப்பதிலும் பரீட்சயம் பெற்றவர்.

1972 ஆம் ஆண்டில் இரணைமடு கனகாம்பிகை அம்மனுக்கும் 1975,1976 ஆம் ஆண்டு காலப் பகுதியில் திருவையாறு பிள்ளையார் கோவிலுக்கும் முறையே திருவிளையாடற் புராணம், பிள்ளையார் புராணத்தையும் 1975 முதல் 1976 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய தலைவரும் தர்மகத்தாவுமாய் விளங்கிய ஐங்கரப்பிள்ளை பூசாரியார் காலப்பகுதியில் "கதவடைப்பு" மற்றும் "விளக்கு வைப்பு" காலங்களில் ஆலய தல புராணம், மற்றும் கந்தபுராணம், சிவராத்திரிப்புராணம் போன்ற புராணங்களையும் படித்து பயன் சொல்லும் குழுவில் இணைந்து இன்றளவும் அப்பணியினை தொடர்ந்து வழங்கி வருவதாக குறிப்பிடுகிறார்.

1966 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொழும்பு "இந்துப்பிட்டி முருகன்" கோவிலில் தொடர்ந்து ஆறு நாட்கள் சூரன் போர் காலப்பகுதியில் திருச்செந்தூர் புராணத்தை படித்தமைக்காக பொன்னாடை போர்த்து அவ் ஆலயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைக்குடும்ப தர்மகர்த்தாக்களால் கௌரவிக்கப்பட்டதும் அக் காலப்பகுதியில் செட்டித்தெருவின் "கொம்பனித்தெரு கதிரேசன் கோவிலில்" கந்த புராணத்தை புராண படனம் செய்தமையும் 1999,2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்த காலப்பகுதியில் "கனடா கந்தசாமி கோவிலில்" கந்த புராணம், வாதவூரர் புராணம் போன்ற புராணக்கதைகளை சிறப்புடன் புராணபடனம் செய்தமையும் எமது பிரதேசத்துக்கு வெளியே சென்றும் இவர் ஆற்றிய புராணபடன சேவையை பகிர்வதாக அமைகின்றது.

இவர் விருத்தப்பா யாப்பை அதிகம் பின்பற்றி அதீத கற்பனைத் திறத்துடன் இயற்கை வளங்களையும், தான் வாழ்ந்த, தன்னைச்சார்ந்து உள்ள இடங்களையும் அவற்றின் சிறப்புக்களையும் இணைத்து கவிபடைப்பதில் நாட்டமுடையவர். இதுவரை சுமார் நூற்றுக்கு மேற்பட்ட அமரர் கல்வெட்டுக்களுக்காக "திதி வெண்பா" பாடியும் அவற்றை தொகுத்தும் உள்ளார்.இவர் "பசுந்தரையான்" எனும் புனை பெயரில் உள்ளூர் பத்திரிகைகளிலும் மலர்களிலும் கவிதைகள் மற்றும் பாடல்களை அவ்வப்போது எழுதி வருகிறார்.

இவரது பொதுப்பணிகளில் சிலவாக பூநகரி பிரதேச சபையின் உபதலைவராக விளங்கியமையும் பெரியகுளம் காட்டுக் கண்ணகி அம்மன் பரிபாலன சபை தலைவராக தற்போது விளங்குகின்றமையையும் குறிப்பிட முடிகிறது.

எமது பிரதேசத்தில் சமய புராணபடனம் செய்யும் புராணபடனக்காரர்களில் ஒரு சிலருள் இவர் முதன்மையானவராக உள்ளமையை இனம் காணமுடிகிறது.

2013 ஆம் ஆண்டில் இரணைமடு கனகாம்பிகை அம்மன் தேவஸ்தானத்தில் தொடர்ச்சியாக பத்து நாட்கள் திருவாதவூர் புராணத்தை புராணபடனம் செய்தமைக்காக 2013 ஆம் ஆண்டில் "வாதவூர் வாதிரி" எனும் பட்டம் ஆலயத்தினரால் வழங்கி கௌரவிக்கப்பட்டவராக விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.மயில்வாகனம் வேலாயுதபிள்ளை

## எழுத்தாக்கம்

கலவெட்டித்திடல், புளியம்பொக்கணையில் ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஐந்தாம் ஆண்டு ஐப்பசி மாதம் நான்காம் திகதி பிறந்த இவர் இன்றுவரை இங்கேயே வாழ்ந்து வருகின்றார். ஏழு வயதிலேயே போலியோ நோயினால் இடக்கால் வலுவிழந்துள்ள போதும் தனது தளராத ஆர்வத்தால் தனது ஆரம்பக்கல்வியை கிளி/ கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை யாழ்ப்பாணம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் பெற்றவர்.

தொழிலின் நிமித்தம் இவர் ஆரம்பத்தில் கமநல சேவை நிலையத்தில் ஆறு வருடங்கள் எழுதுவினைஞராக கடமையாற்றி பின் உப தபால் அதிபராக புளியம்பொக்கணையில் 2015 ஆம் ஆண்டின் பிற்பகுதி வரை கடமையாற்றி ஓய்வுப் பெற்றுள்ளார்.

சிறுவயதிலேயே வில்லிசை, கவிதை, கட்டுரை எழுதுவதிலும், நிகழ்த்துவதிலும் ஆர்வம் காட்டியவர். முப்பது வயது முதல் இன்று வரை "ஐங்கரதாசன்", மற்றும் "மயில்குஞ்சு" போன்ற புனைபெயர்களிலும் "மயில் வேலாயுதபிள்ளை" என்னும் பெயரிலும் பல கவிதைகளை உள்ளூர் பத்திரிகைகளில் அவ்வப்போது எழுதி வருகிறார். பிரதேசத்தின் அமரர் கல்வெட்டுக்களை எழுதுவதில் ஆர்வம் காட்டும் இவர் இதுவரை சுமார் 80 மேற்பட்ட அக்கல்வெட்டுக்களை தொகுத்துள்ளவராயும் விளங்குகிறார்.

1985 ஆம் ஆண்டில் கண்டாவளைப் பிரதேசத்துக்கு வருகை தந்திருந்த "ஆத்ம ஜோதி முத்தையாவை" வரவேற்று வில்லிசை நிகழ்வை ஆற்றுகை செய்திருந்ததாக குறிப்பிடும் இவர் பிரதேச ஆலயங்களிற்கு ஊஞ்சல் பாடல்கள், தலவரலாறுகளுக்கான உரைகளையும் செய்திருந்தவர். அந்த வகையில் கலவெட்டித்திடல் புதிய கண்ணகை அம்மன் ஆலயத்திற்கும் கச்சாய் வெள்ளாம் போக்கட்டி கொக்கட்டி விநாயகர் ஆலயத்திற்கும் என ஊஞ்சல் பாக்களையும் எழுதியவர்.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய தல வரலாற்றை உரை நடையுடன் கூடிய எளிய பதிப்பாக 2012 ஆம் ஆண்டில் மாற்றியமைத்தவர். தமிழ் மொழியில் எழுத்துக்களையும் சொற்களையும் லாவகமாக இலக்கண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பத்துடன் படைப்புக்களில் காட்டுவதில் திறனுடையவர்.

பிரதேச மலரான வளை ஓசையிலும் இவரது கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இளமைக்காலத்தில் "ஐக்கிய நாணய சங்கத்தலைவராகவும்" விளங்கியவர். இன்று "காண்டீபன் சனசமூக நிலைய" ஆட்சி குழு உறுப்பினராகவும், கலவெட்டித்திடல் கண்ணகை கலாமன்ற மூத்த உறுப்பினராகவும் விளங்கி பல்வேறு சமய, சமூக, கலைப்பணிகளை ஆற்றிவருவதில் ஆவலுடையவராக விளங்குகின்றார்.

2013 ஆம் ஆண்டில் இவரது கலை, எழுத்தாக்கப்பணிகளை கௌரவிக்கும் முகமாக கண்டாவளை பிரதேச கலாசார பேரவையும் பிரதேச செயலகமும் இணைந்து பரந்தனில் நடாத்தியிருந்த பிரதேச கலாசார விழாவில் "கலை ஒளி" விருது வழங்கி இவரது சேவையை மதிப்பளித்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.ஆறுமுகம் பாலசுப்பிரமணியம்

## கூத்து

இவ் கூத்துக்கலைஞர் ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஆறாம் ஆண்டு வைகாசி மாதம் பதினோராம் திகதி பளையில் பிறந்தவர். தட்டுவன் கொட்டியை நிரந்தர வதிவிடமாக கொண்டவர். ஆரம்பக்கல்வியை தட்டுவன்கொட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அதன் அதிபராக திரு.ராஜேந்திரம் அவர்கள் இருந்த காலப்பகுதியில் கற்றவர்.

பத்து வயதில் 'குணசீலி" நாடகத்தில் தோழியாக பெண்பாத்திரம் ஏற்று நடித்தது முதல் இவரது கலைத்துறைப்பிரவேசம் ஆரம்பமாயிற்று. இவர் "பவளக்கொடி" நாடகத்தில் பவளக்கொடியின் மகனான புலேந்திரனின் பாத்திரத்தையும் "கோவலன் கண்ணகி கூத்தில்" கண்ணகி வேடத்தையும் "காத்தவராஜன் கூத்தில்" "முத்துமாரி" வேடத்தையும் "சிறீவள்ளி" நாடகத்தில் பெண்பாத்திரங்களையும் இளமைக்காலத்தில் நடித்துள்ளார். இவர் சிறுவயதுகளில் இசை நாடக, கூத்துக்களை யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த எஸ்.எம் கிஸ்ரோஸ்ரம் மற்றும் எஸ். ரீ . செல்லத்துரை போன்றவர்களிடம் பயின்றவர். இவர்களின் வழிகாட்டலில் பல பெண் பாத்திரங்களை நன்கு பொருந்திவரும் வகையில், பின் நாளில் தான் விரும்பி நடித்தாக குறிப்பிடும் இவர் மிகுந்த குருபக்தியுடன் தன் அண்ணாவிமார்களை பற்றி கூறிப் பெருமைப்படுபவராக விளங்குகின்றார்.

"பாலா அண்ணாவி" என பிரதேசத்தவர்களால் அழைக்கப்படும் இவர் கிளிநொச்சி, கிராஞ்சி, சுதந்திரபுரம், கண்டாவளை, கண்ணகிநகர், தட்டுவன்கொட்டி ஆகிய பிரதேச இளம் கூத்து கலைஞர்களுக்கு கூத்துக்களை பழக்கி மேடையேற்றும் பிரதான அண்ணாவியாக தற்போது செயற்பட்டு வருகிறார்.

இவர் தனது சொந்தக் கிராமமான தட்டுவன்கொட்டி கிராமத்தில் பிள்ளை மடத்தில் உறைகின்ற கண்ணகி அம்மனுக்கு வருடந்தோறும் வைகாசிப் பொங்கலின் போது நேர்த்தியடிப்படையில் கூத்துப்பழக்கி அதனை ஊரவர், கலாமன்றத்தினர், ஆலய நிர்வாகத்தினர் போன்றவர்களின் பூரண ஒத்துழைப்பினை பெற்று ஆற்றுகை செய்து வருகின்றமை சிறப்பான அம்சமாகும்.

நீண்ட பாரம்பரியமாக இக் கிராமத்தில் கூத்துக்கலையானது சிதையாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரப்பட்டு வருவது வியப்பளிப்பதாகவே உள்ளதுடன், இக் கிராம மக்களினதும் கலைஞர்களினதும் கூத்து மேல் ஏற்பட்ட அந்த ஆர்வமானது கண்ணகி தெய்வத்தின் மீது அவர்கள் கொண்ட பக்தியையும் எடுத்து சொல்லவல்லன.

இவ்வாண்டில் (2015) கூட தட்டுவன்கொட்டி கண்ணகியம்மன் ஆலய வைகாசிப் பொங்கலின் போதும், கண்டாவளை முத்தமிழ் கலாமன்றத்தினர் கண்டாவளை வீரபத்திரர் ஆலய முன்றலில் அரங்கேற்றிய சம்பூர்ண காத்தான் கூத்துக்கும், கண்டாவளை பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து தட்டுவன்கொட்டியில் எடுத்திருந்த பிரதேச கலாசார பெருவிழாவில் ஆற்றுகை செய்து பெரும் வரவேற்பை பெற்றிருந்த, "தட்டுவன்கொட்டி அம்பாள் கலாமன்றத்தினரின்" கோவலன் கண்ணகி கூத்துக்கும் ஆன பிரதான அண்ணாவியாக இவர் தொழிற்பட்டிருந்தமை குறிப்பிட தக்கதாகும்.


இவ்வாண்டு ஆடி மாதம் நிறைவேறிய புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய மகோற்சவ காலத்தில் தட்டுவன்கொட்டி கிராம மக்களின் வேட்டைத் திருவிழா உற்சவ நாளின் அன்றிரவில் ஆலய முன்றலில் தட்டுவன்கொட்டி அம்பாள் கலாமன்றக்கலைஞர்களால் மேடையேற்றப்பட்ட"சம்பூரண காத்தவராஜன்" ஆற்றுகைக்கும் அண்ணாவியாக தொழிற்பட்டவர்.

எமது பிரதேசத்தில் தற்போது வாழ்கின்ற ஒரு சில கூத்து அண்ணாவி மார்களுள் பெயர் பெற்ற அண்ணாவியாகவும் இவரே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது சேவைக்காக 2012 ஆம் ஆண்டில் கண்டாவளை பிரதேச கலாசார பேரவையும் கண்டாவளை பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய கலாசார விழாவில் "கலை ஒளி" விருது வழங்கி கௌரவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.செல்லத்துரை விந்தன்

## நாடகம்

இவர் ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபதாம் ஆண்டு கார்த்திகை 18ஆம் திகதி மானடித்த குளம், கண்டாவளையில் பிறந்தவர். ஆரம்ப, இடைநிலைக்கல்வியை ஊரின் பழமையான கிளி/ கண்டாவளை மகா வித்தியாலயத்திலேயே கற்று பின்னர் உயர் கல்வியை யாழ் /சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் இவர் கற்றுக் கொண்டர். ஆசிரியர் தொழிலில் இணைந்து தற்போது கிளிநொச்சி வலய கல்விப்பணிமனையில் முன்பள்ளிக்கான உதவிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி வருகின்றார்.

இவர் பள்ளிக்காலத்தில் கூட்டுறவு தின விழாக்கள் , மற்றும் கலை விழாக்களின் போது பேச்சு, நாடகம், விவாதங்களிலும் தனது கலை ஆர்வத்தை வெளியிட்டிருந்தவர்.

இயல்பாகவே சிறு வயது முதல் கூத்து, நாடகங்களில் ஆர்வம் கொண்டிருந்த இவர் 1989ஆம் ஆண்டு காலத்தில் "மண் சுமந்த மேனியர்" நாடகத்தில் நடித்து புகழ் பெற்றவர்.

"சந்தனக்காடு", "இப்போதைக்கு ஏதுவழி" என 1991,1992 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஈழத்தில் தமிழர் வாழும் பிரதேசங்களில் எல்லாம் மேடைகண்ட இவ் நாடகங்களில் நடித்திருந்தவர். சிறந்த ஒரு நடிகராகவும், அரங்கச் செயற்பாட்டாளராகவும் விளங்கும் இவர், யாழ். பல்கலைக்கழக நாடக துறையுடனும் ஏனைய கலைப்பீடம் சார்ந்த கல்விப்புலமையாளர்களான பேராசிரியர் என்.சண்முகலிங்கன், கலாநிதி சிதம்பரநாதன் மற்றும் பத்மினி சிதம்பரநாதன் போன்ரோருடன் கலை, அரங்க செயற்பாடுகளின் போது இணைந்து செயற்பட்டமையையானது நாடக துறை சா்ர் தனது ஆளுமையை விருத்தி செய்ய பெரும் பயனாக அமைந்தது என குறிப்பிடுகின்றார்.

இவர் கிளிநொச்சி மாவட்டத்தில் அரங்கச்செயற்பாட்டு களத்தை பாடசாலைகளில் அறிமுகம் செய்ய பெரும் பணியாற்றியவர்.

இவர் 2015 ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்ட செயலகமும் அதன் பண்பாட்டுப் பேரவையும் வெளியிட்டிருந்த "கிளிநொச்சி மாவட்ட தொன்மையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலங்கள்" எனும் ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய நூல் தொகுதியில் "கிளிநொச்சி மாவட்டத்தின் நாடக வரலாறு" பற்றிய விபரங்கள் தொடர்பான ஆய்வுக்கட்டுரை ஒன்றை பதிவு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.காசிப்பிள்ளை பாலேஸ்வரன் (காசிமணியம்)

## பல்துறை

ஆயிரத்துதொள்ளாயிரத்து அறுபத்தி இரண்டாம் ஆண்டு மார்கழி மாதம் இருபத்தைந்தாம் திகதி கண்டாவளையில் பிறந்த இவர் இன்று வரை கூகைமாவடியிலேயே வசித்து வருபவராவார்.

தனது கல்வியை கிளி/கண்டாவளை மகா வித்தியாலயத்திலே பெற்றுக்கொண்டவர். இளமைக்காலம் முதலே நாடகம் நடித்ததிலும் பேச்சாற்றலிலும் இயல்பாகவே திறனுடையவராக இவர் விளங்கியிருந்தார். இத்திறனானது பின்னர் பிரதேசத்தின் பாடசாலைகளின் நிகழ்வுகள், சமூக அமைப்புக்களின் நிகழ்வுகளில் இவர் காட்டிய பங்குபற்றுதல்களால் விரிவு பெற்றது. நாடகம், விவாத அரங்குகள், கவிதையாக்கம், கல்வெட்டுக்கள் ஆக்கம், சிறுகதைகள் ஆக்கம் என பல்துறையிலும் பிரகாசித்தார்.

1980 களில் "உண்மையே உன்விலை என்ன" எனும் நாடகத்தில் நடித்தது முதல் இவரது கலைப்பணியும் தொடரலாயிற்று. 1982 இல் "சுட்டிவேரம் கண்ணகை ஆலய முன்றலில்" "சட்டத்துக்கு ஒரு சவால்" எனும் நாடகத்தை நெறியாள்கை செய்து பாராட்டுப்பெற்றவர். கண்டாவளை முத்தமிழ் கலாமன்றம் 2008 ஆம் ஆண்டு நடாத்திய முத்தமிழ் விழாவின் போதான காலப்பகுதியில் அதன் போசகராகவும் விளங்கியிருந்தார்.

2011 ஆண்டு முதல் கலாசார பேரவையின் மூத்த உறுப்பினருள் ஒருவராக விளங்கி பேரவையின் செயற்பாடுகளுக்கு உதவி வருகிறார். பிரதேச கலாசார விழாக்களில் பட்டிமன்றம், வில்லிசை, கவியரங்கம் என பல துறைகளிலும் பிரகாசித்துவரும் இவர் சிறந்த ஒரு சிறுகதை ஆசிரியரும் கூட. சிறந்த கற்பனை வளம் மிக்கதும், பிரதேச வளம், இயற்கை வனப்பு பிரதேச மாந்தர்பண்பு, பழக்க வழக்கங்கள், ஆன்மீக விடயங்களை எல்லாம் சிறுகதைகளூடாக எடுத்துச் சொல்லும் இவரது பாங்கு அலாதியானது. பிரதேச மட்ட, மாவட்ட மட்ட தேசிய கலை இலக்கிய சிறுகதை போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களை வென்றவர்.

2014 ஆம் ஆண்டில் "மண்வாசனை" எனும் சிறுகதைத் தொகுப்பை வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள நிதி அனுசரணையுடன் அச்சேற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கலாசார பேரவையூடாக வெளியிட்டு இருந்தமையும் அச்சிறுகதைத் தொகுப்பு பெரும் வரவேற்பை வாசகர்களிடத்தும் பிரதேச மக்களிடத்தும் பெற்று இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. மாற்று திறனாளியான இவரது இந்நூல் ஆக்க முயற்சிக்காக 2014 ஆம் ஆண்டின் சர்வதேச அங்கவீனர் தின நிகழ்வு தினத்தில் அங்கவீனர்க்கான தேசிய செயலகத்தால் ஒழுங்கமைக்கப்பட்டு ஜனாதிபதி மாளிகையில் இவர் கௌரவம் பெற்றிருந்தமையும், 2015 ஆம் ஆண்டின் கரைச்சி பிரதேச சபையின் உப அலுவலகத்தால் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத நிகழ்வில் முரசுமோட்டையில் எழுத்தாளர்க்கான கௌரவிப்பினையும் இதனால் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பன்முக ஆளுமையுடன் விளங்கும் இவர் பிரதேசம் சார்ந்த பண்டைய வரலாறுகளையும் புவியியல் அமைவுகளையும், பிரதேசமக்களின் பழக்கவழக்கங்கள், உணவு, உடை, உறையுள், பொழுதுபோக்கு அம்சங்கள், பொருளாதார வளங்கள் பற்றி நன்கறிந்தவராகவும் விளங்குபவர்.

இத்தகு புலமையாளனும் பன்முக ஆளுமையும் உடைய இப் படைப்பாளியைக் கௌரவித்து 2011 ஆம் ஆண்டில் எமது கலாசார பேரவையும் பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய கலாசார விழாவின் போது "கலைஒளி" விருது வழங்கி கௌரவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.நாகப்பன் உதயகுமார்

## கரகம்

நாகப்பன் லட்சுமி தம்பதிகளின் மகனாக ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஆறாம் ஆண்டு வைகாசி பதினாறாம் திகதி கண்டியில் பிறந்தவர். எமது பிரதேசத்தின் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில "கரகம்" சார்ந்த கலைஞர்களுள் இவர் முதன்மையானவர்.

1974 ஆம் ஆண்டு முதல் முரசுமோட்டைப்பகுதியில் வசித்து பின் 1996 ஆம் ஆண்டிலிருந்து குமாரசாமிபுரம் கிராமத்தில் வசித்து வருகின்றார். தற்போது சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் புன்னைநீராவி அலுவலகத்தில் சேவையாற்றி வருகின்றார்.

கரகக்கலையை இவர் தந்தையிடம் இருந்து மரபுவழியாக கற்றுக்கொண்டவர். இவரது தந்தை "ஆனந்த பாபு" என்றும் "நாகேஸ்" என்றும் அழைக்கப்பட்டவர். அவரும் சிறந்த டிஸ்கோ கலைஞராகவும் விளங்கியவர்.

இவர் "கரகம்" மட்டுமன்றி "சிலம்பு", "தீப்பந்த ஆட்டம்", "டிஸ்கோ ஆட்டங்களிலும்" அதன் நுட்பங்களை அறிந்து அவற்றை சிறுவயது முதலே பழகியிருக்கின்றார்.கரகத்தில் "பூக்கரகம்", "கிளிக்கரகம்", "பாம்புக்கரகம்", "தீக்கரகம்" என பல்வேறு வகையான கரகக்கலையின் ஆட்டமுறைகளை ஆடுவதில் தேர்ச்சி உடையவராக விளங்குகிறார்.

இயல்பாகவே கலைத்துறையில் ஈடுபாடு உடைய இவர் அழகிய முறையில் கிராமிய பாடல்களைப் பாடுவதிலும், நாடகத்துறையிலும் ஈடுபாடு உடையவராக விளங்குகிறார். கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களிலும் திறந்த வெளி அரங்கு நிகழ்வுகள் மற்றும் மேடை நிகழ்வுகளிலும், பிரதேச ஆலயங்களின் உற்சவ கால கலைநிகழ்வுமேடைகளிலும் கரகக் கலையை ஆடிப் புகழ் பெற்றவர்.

2014 ஆம் ஆண்டில் கண்டாவளை பிரதேச செயலக கலாசார பேரவை நடத்திய கிராமிய பயிற்சி பட்டறையில் "கரகக்கலை" தொடர்பான பயிற்சிக்கான வளவாளராகவும் தொழிற்பட்டிருந்தவர்.

2014,2015 ஆம் ஆண்டுகளில் பிரதேச கலாசார விழாக்களிலும் 2014 ஆம் ஆண்டின் வட மாகாண புத்தாண்டு வரவேற்பு விழாவின் போது முழங்காவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது மைதானத்திலும், 2015 ஆம் ஆண்டு "வசந்தம் ரீவி" யுடன் இணைந்து கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஏற்பாடு செய்திருந்த புதுவருட விழாவின் நேரடி ஒலிபரப்பு நிகழ்வுக்காக கிளி/மலையாளபுரம் முத்துமாரி அம்மன் கோவில் வளாகத்திலும் தனது கரகாட்டத்திறனை வெளிப்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

எமது பிரதேசத்தில் ஒரு சில கலைஞர்களாக இனங்காணப்படுகின்ற இக்கரகாட்டம் சார் கலைஞர் தனக்கு பின்னர் இக் கலையை பிறர்க்கும் கையளிப்பதற்கு ஆவலாக உள்ள போதும் இத்துறையில் தற்கால இளைய சமூகத்தினரின் அக்கறை வெகுவாக குறைந்து காணப்படுகிறது என ஆதங்கப்படுகிறார். இவரின் சகோதரி ஒருவரும் கரகாட்டத்தை ஆடிவருவதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.அமரசிங்கம் கேதீஸ்வரன் எழுத்தாக்கம்

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஆறாம் ஆண்டு ஆனி மாதம் இருபதாம் திகதி நெடுந்தீவில் பிறந்தவர். இளமைக்காலத்திலே கட்டைக்காடு பெரியகுளத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்.

தனது ஆரம்பக்கல்வியை நெடுந்தீவிலும் பின்னர் இராமநாதபுரம் மகாவித்தியாலயம், தருமபுரம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இடைநிலைக்கல்வியை தொடர்ந்த இவர் இவர் க.பொ.தா சாதாரண தரம் வரையிலும் கற்றுத்தேறினார். பின் உயர் கல்வியை கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கற்றார். இளங்கலைமாணி பட்டத்தை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பொருளியல் பாடத்திலும் தொடர்ந்து அதே துறையில் முதுதத்துவமாணி பட்டத்தையும் கற்றுத்தேறியவர். அரச சேவையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றிய பின் இலங்கை திட்டமிடல் சேவையில் இணைந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் உதவி திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

இராமநாதபுரம் பாடசாலையில் தரம் ஆறில் கல்வி கற்கும் போது விபுலானந்தரின் நினைவு தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்டிருந்த கவிதைப்போட்டியில் பரிசு பெற்றது முதல் எழுத்துத் துறையில் தனக்கு ஆர்வம் ஏற்பட்டது எனக்கூறும் இவர் 1978ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் சமேளனத்தால் நடத்தப்பட்ட கவிதைப்போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றதாகவும் குறிப்பிடுகின்றார்.

இவர் 2014இல் "திட்டமிடல் மூலதத்துவங்கள்" எனும் திட்டமிடல் துறைசார்ந்த விரிவான அறிவியல் நூல் ஒன்றையும் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் கட்டுரை, கவிதை, விமர்சனம், மேடைப்பேச்சு ,விவாதஅரங்கு எனப்பல துறைகளிலும் கிளிநொச்சி மாவட்ட ரீதியில் தான் சார்ந்த பங்களிப்பைக் கனதியாக வழங்கிவருகின்றார்.

கிளி. மாவட்ட தமிழ்ச்சங்க நிகழ்வுகள் , மாவட்ட பண்பாட்டு பேரவை, பச்சிலைப்பள்ளி மற்றும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி பிரதேச கலாசார பேரவைகளின் நிகழ்வுகளின் தீர்ப்பாளராகவும், விவாத அரங்குகளின் நடுவராகவும் செயலாற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டாவளை பிரதேசம் சார்ந்து பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் 2012 ஆம் ஆண்டில் கண்டாவளை ம.வித்தியாலயத்தில் நடத்திய கலாசார விழாவில் கவியரங்கத்தில் தலைமைக் கவிஞராக கலந்து சிறப்பித்தார். 2013 இல் நடைபெற்ற கலாசார விழாவில் பட்டிமன்ற நடுவராகவும் 2014 ஆம் ஆண்டில் பரந்தனில் நடாத்திய கலாசார விழாவின் போது வெளியிடப்பட்ட பிரதேச மலரான "வளை ஓசை நாதம் 3" ற்கான ஆய்வுரையையும், 2015 ஆம் ஆண்டில் தட்டுவன்கொட்டியில் நடாத்தியிருந்த கலாசார விழாவின் போது பட்டிமன்ற நடுவராகவும் செயற்பட்டவர்.

இவர் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு பேரவையும், மாவட்ட செயலகமும் இணைந்து வெளியிட்டிருந்த "கிளிநொச்சி மாவட்ட தொன்மையின் மூலங்கள்" எனும் ஆய்வேட்டில் "கிளிநொச்சி மாவட்ட குடியேற்ற திட்டங்களின் வரலாறும் வாழ்வியலும்" எனும் தலைப்பில் ஆய்வு கட்டுரை ஒன்றையும் பதிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கண்டாவளை பிரதேச கலாசார பேரவை உருவாக்கப்பட்டு பிரதேச செயலகத்துடன் இணைந்து 2011ஆம் ஆண்டில் தருமபுரத்தில் நடாத்திய முதலாவது கலாசார விழாவின் போது வெளியிடப்பட்டிருந்த "வளைஓசை நாதம் 1" இல் "கண்டாவளை பிரதேச பண்பாடு பற்றிய எண்ணக்கரு" எனும் தலைப்பில் கட்டுரை ஒன்றையும் பதிவு செய்துள்ளார். 2014ஆம் ஆண்டில் கண்டாவளை பிரதேச சிறுகதை எழுத்தாளரான காசி மணியத்தின் "மண்வாசனை" எனும் நூலின் வெளியீட்டு விழாவில் அச் சிறுகதை நூலுக்கான ஆய்வுரையையும் இவர் ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தன் தொழில் சார்ந்தும் இலக்கியம் சார்ந்தும் எப்போதும் புத்தாக்கச்சிந்தனை உடையவராக விளங்கும் இவர் தான் வாழ்ந்த கண்டாவளை பிரதேசம் மட்டுமன்றி கிளிநொச்சி மாவட்ட கலை, பண்பாடு, ஏனைய துறை அபிவிருத்திக்காகவும் அர்பணிப்புடன் செயற்படுகின்றார். கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது முனைப்புடன் இயங்கிவரும் இலக்கிய ஆளுமைகளில் திரு.அ.கேதீஸ்வரன் முதன்மையானவர். கவிதை, கட்டுரை , ஆய்வு, திறனாய்வு, மேடைப்பேச்சு மற்றும் நடிப்பு என பல் ஆளுமை கொண்ட ஒருவராக இவரை நாம் தரிசிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.மரியாம்பிள்ளை றோமியல்

## நாடகம்

தருமபுரம் கிழக்கு பகுதியில் வாழ்ந்து வரும் இவ் நாடகக் கலைஞர் ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தெட்டாம் ஆண்டு ஆடி மாதம் இருபத்தெட்டாம் திகதி புங்குடுதீவில் பிறந்தவர். தனது பாடசாலை கல்வியின் பின் ஆசிரிய சேவையில் இணைந்து பணியாற்றி வரும் இவர் சிறு வயது முதற் கொண்டு நாடகத்துறையில் அதீத ஆர்வமுடையவராக விளங்கியவர். இவர் தனது பன்னிரெண்டாவது வயதில் கிளி/உருத்திரபுரம் பற்றிமா பாடசாலையில் "யூலியசீசர்" நாடகத்தில் நடித்து முதல் தனது கலைப்பயணம் வேகமாக வளரலாயிற்று என்கிறார்.

இதுவரை சுமார் நூறுவரையிலான கிறிஸ்தவ, சமூக,நவீன வகை நாடகங்களையும் "ஞானசௌந்தரி" கூத்தினையும் நடித்தும் நெறியாள்கை செய்தும் உள்ளவர்.

"நியாயமான கதை கேளு", "பொறுத்தது போதும்" , "ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு", "பண்டாரவன்னியன்" (1992 இல்) போன்ற நாடகங்களின் நெறியாள்கை இவருக்கு சிறப்பை தேடித்தந்தவை என்கிறார்.

இவர் கிளிநொச்சி மாவட்ட கத்தோலிக்க இளையோர் மன்றம் நடத்துகின்ற கலைத்துறைசார் பாசறைகளில் பிரதான வளவாளர்களில் ஒருவராக செயற்பட்டவர் மேலும் கிளிநொச்சி மாவட்டரீதியாக இம் மன்றமானது "சுனாமி" பேரலையின் அனர்த்தத்தின் பின்னரான ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகளை நடத்திய குழுவில் பிரதான இடத்தை பெற்றிருந்தவர்.

இவர் "பாதுகாவலன்" சஞ்சிகையின் ஒரு ஊடகவியலாளராகவும், நாடகத்துறை, கூத்துத்துறைசார், கருத்தமர்வுகள், வதிவிடக்கருத்தரங்குகள், அரங்கமுறைமைகளுக்கான பயிற்றுவிப்பாளராகவும், வளவாளராகவும் தொழிற்படுபவர். 2014 ஆம் ஆண்டு பிரதேச கலாசார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கண்டாவளை பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்பட்ட இருநாள் "கிராமிய கலை பயிற்சிப்பட்டறை" நிகழ்வில் கூத்து மற்றும் நாடகம் தொடர்பான பயிற்றுவிப்பாளராயும் செயற்பட்டிருந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச தொழில் ஈடுபட்டுள்ளபோதும் தனக்கு ஈடுபாடான நாடகத்துறை சார்ந்த வளர்ச்சிக்காக ஆர்வத்துடன் பங்காற்றிவரும் இவரை தருமபுரம் பரிலூக்கா தேவாலயத்தினர் 2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒளிவிழாவின் போது கௌரவித்து இருந்தனர்.

இவரது பணிக்காக 2011 ஆம் ஆண்டில் பிரதேச கலாசார பேரவை கண்டாவளை பிரதேச செயலகத்துடன் இணைந்து தருமபுரத்தில் நடத்தியிருந்த கலாசார விழாவின் போது "கலை ஒளி" விருது வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவரது துறைசார் ஆளுமை இன்னும் எதிர்காலத்தில் முழுநேரமாக விரிவடைகிறபோது குறிப்பாக அவரைச்சார்ந்து இயங்கும் கட்டைக்காடு கலைஒளி மன்றத்தூடாக விரிவடைகிறபோது பிரதேசத்தின் நாடக துறைசார் அபிவிருத்தி நிலை மேன்மை பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.சேவுகன் ஆறுமுகம்

## இலக்கியம்

இவர் ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஒன்பதாம் ஆண்டு சித்திரை மாதம் இருபத்தி நான்காம் திகதி தருமபுரத்தில் பிறந்தவர். தனது ஆரம்பக்கல்வியையும் மற்றும் உயர் கல்வியையும் கிளி/ தருமபுரம் மகா வித்தியாலயத்தில் கற்றுக் கொண்டவர். இளமையிலே தமிழ் ஆர்வம் கொண்ட இவருக்கு ஆசிரியத் தொழிலில் இணைந்தமையானது தனது தேடலுக்கான களத்தை ஏற்படுத்தியிருந்தது என்கிறார்.

இவர் தனது பாடசாலைக் கல்விப்பராயத்தில், தமிழ் மன்றம் , இந்துமன்றம் ஆகியவற்றில் பதவிகளை அலங்கரித்ததுடன் பேச்சு, விவாதம், கட்டுரையாக்கங்களில் பங்குபற்றி பரிசில்களையும் பெற்றுக்கொண்டமைகளை ஞாபகங்கொள்கிறார்.

இயல்பாகவே தமிழ் இலக்கிய, சிறுகதை, நாவல்களை தேடிக்கற்பதிலும் வாசிப்பதிலும் பழக்க முடையவர். 1990-1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வாசகர் வட்டம் ஒன்றை தமது நண்பர்கள், சக ஆசிரியர்கள் இடையே உருவாக்கி "நிலாமுற்றம்" மற்றும் "முழு நிலாக்கால ஒன்றுகூடல்கள்" எனும் பெயரில் இலக்கிய சந்திப்புக்களை தம்மிடையே ஒருங்கிணைத்து செயற்பட்ட காலம் மிகவும் பயனுள்ளதாயிருந்தன என்கிறார்.

விஸ்வமடு பகுதியில் நீண்டகாலமாக இயங்கிவரும் பொது நூலகம், மற்றும் முரசுமோட்டை பொது நூலகங்களும் தனது வாசிப்பு ஆர்வத்திற்கு தீனி போட்டவை; எனினும் இவை நூல்கள் பற்றாக்குறையுடன் இன்றளவும் இருப்பதாக ஆதங்கப்படுபவராயுள்ளார்.

இவர் 2010 ஆம் ஆண்டு முதல் கண்டவளை பிரதேச கலாசாரச் செயற்பாடுகளுக்கு ஆதரவாக இருப்பவர். கலாசார பேரவையின் ஆரம்ப கால உறுப்பினராக விளங்கி தகுந்த ஆலோசனைகளையும், கலைச்செயற்பாடுகளையும் வழங்கி வருகிறார். பிரதேச செயலக ரீதியாக இடம் பெறும் படைப்பாக்க போட்டிகள், தேசிய கலை இலக்கியப்போட்டிகள், அறநெறி மாணவர்களுக்கான போட்டிகள் என்பவற்றில் விடைத்தாள்களை மதிப்பிடும் குழுவில் ஒருவராகவும், தீர்ப்பாளராகவும் ஒத்துழைப்பினை விருப்புடன் நல்கிவருபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் இலக்கிய கூட்டங்கள், இலக்கிய ஆய்வரங்குகள், தமிழ்ச்சங்க போட்டிகளிலும் தனது பிரசன்னத்துடன் முழுமையான பங்களிப்பை வழங்கி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.ஆறுமுகம் செல்வராஜ்

## நாடகம்

இவர் ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தி இரண்டாம் ஆண்டு செம்ரெம்பர் இருபத்து இரண்டாம் திகதி கோரக்கன் கட்டில் பிறந்தவர். தனது ஆரம்பக்கல்வியை கிளி/முரசுமோட்டை றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் பின்னர் இடைநிலை கல்வியை முரசுமோட்டையிலும் கற்றுக்கொண்டவர். தனது பதினைந்து வயது முதல் அக்காலத்தில் 1987 காலத்தில் இயங்கிய "முரசு நகர் துரைதாஸ் இசைக்குழுவில்" முன்னணி இளம்பாடகராகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர். தொடர்ந்து 2003 முதல் தன்னை ஓர் நடிகனாக பிரதேச மன்றமான புத்தொளி கலை இலக்கிய மன்றமூடாக இனங்காட்டத்தொடங்கியது முதல் இன்றுவரை செயற்பட்டு வருகிறார்.

2006முதல் 2008ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வெண்புறா நிறுவனம் ஊடாக கண்ணிவெடி விழிப்புணர்வு நாடகச் செயற்பாட்டை கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டம் எங்கும் முன்னெடுத்த நாடகக் குழுவில் ஒரு நடிகராகவும் சுமார் 100ற்கு மேற்பட்ட ஆற்றுகைகளில் பங்கெடுத்துள்ளார்.

2013, 2014, 2015, காலப்பகுதியில் கண்டாவளை பிரதேசசெயலகத்தால் சம்புக்குளம், கல்லாறு, பரந்தன், தருமபுரம், நாவல்நகர், கோரக்கன்கட்டு போன்ற பிரதேசங்களில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டிருந்த கலாசார விழிப்புணர்வு செயற்திட்ட நாடகக் குழுவில் முக்கியபங்கினை நடிகராகவும் பிண்ணனிகுரல் வழங்குபவராகவும், ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுபேரவையின் முதலாவது ஆட்சி காலத்திற்கான கண்டாவளைப்பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரு செயற்குழு உறுப்பினர்களுள் இவரும் ஒருவராக விளங்கி மாவட்டமட்ட செயற்பாடுகளிலும் ஒத்துழைப்பை நல்கியிருந்தவர்.2014ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்ட மட்டத்தில் இயங்கும் கலாமன்றங்கள் இடையே பண்பாட்டு பேரவை நடாத்தியிருந்த கவிதை எழுதுதல் போட்டியில் பங்குபற்றி பரிசினையும் வென்றிருந்ததுடன, புத்தொளி கலாமன்றத்தின் ஊடாக ஆற்றுகை செய்யப்பட்ட சமூக நாடகம் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்று இருந்தமையும் அதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவராக் இவரும் நடித்தும் உள்ளார்.

தொழிலின் நிமிர்த்தம் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் சிவில்பாதுகாப்பு திணைக்களத்தின் ஒரு ஊழியராக இணைந்து கொண்ட இவர் இங்கிருந்து கலைதொடர்பான சேவையை ஆற்றிவருகிறார். அதனூடாக தீவளாவியரீதியில் சுமார் 150 நாடக ஆற்றுகைகளை ஆற்றி உள்ளதாக குறிப்பிடும் இவர் தொடர்ந்தும் அப்பணியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவர் கரைச்சி பிரதேச மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசத்தினூடாக முன்னெடுத்த பால்நிலை சமத்துவம் தொடர்பாக தெருவெளிநாடக ஆற்றுகை நாடகக்குழுவிலும் இணைந்து நடித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு. நசரேணு றொபேட் நிக்சன்

## நாடகம்

ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து மூன்றாம் ஆண்டு பங்குனி மாதம் பதினேழாம் திகதி கிளிநொச்சியில் பிறந்த இவர் தற்போது கோரக்கன் கட்டில் வசித்து வருகிறார். கிளி/புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் ஆரம்பக்கல்வியை கற்ற இவர் உயர்கல்வியை கிளி/முருகானந்தாக் கல்லூரியிலும் கற்றவர்.

பாடசாலைப் பராயத்தில் இயல்பாகவே நடிப்பில் ஆர்வமுடைய இவர் கலைவிழாக்கள், தமிழ்த்தின விழாக்கள், ஒளிவிழாக்களில் நடிப்பு, பேச்சு,சித்திரம் வரைதல் போன்றவற்றில் பங்குபற்றி பரிசில்களையும் பெற்றுக் கொண்டவர்.

1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிளி/அந்தோனியார் றோமன் கத்தோலிக்க பாடசாலை மற்றும் கிளி/விவேகானந்தா வித்தியாலயத்திலும் அவ் அவ் பாடசாலைகள் சார் நாடக மற்றும் கலை செயற்பாடுகளில் அர்ப்பணிப்பு மிக்க சேவையை அங்கு தொண்டராசிரியராக பணியாற்றிய காலத்தில் வழங்கியதாக ஞாபகங்கொள்ளுகிறார்.

முரசு மோட்டை இளையோர் மன்றம், மற்றும் நவ ஜீவனத்தின் சிறுவர் இல்லத்தில் இணைந்து நீண்டகாலமாக கலைப்பணியாற்றியவர். 2010 ஆம் ஆண்டு முதல் கோரக்கன்கட்டு புத்தொளி கலா மன்ற தலைவராகவும் செயற்பட்டு வரும் இவர் பிரதேசத்தில் பல்வேறு விழிப்புணர்வு வீதி நாடகங்களையும் சமூக நாடகங்களையும் மற்றும் வரலாற்று நாடகங்களையும் கலா மன்றம் ஊடாக பிரதேச கலைஞர்களை உள்வாங்கி பழக்கி நெறியாள்கை செய்தும் நடித்தும் வருபவராக விளங்குகின்றார்.

2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையாக தொடர்ந்து ஐந்து வருடங்களிலும் பிரதேச கலாசார பேரவையால் பிரதேச செயலகத்துடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டிருந்த கலாசார விழாக்களில் மேடையேறிய சமூக நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள் போன்ற கோரக்கன் கட்டு புத்தொளி கலா மன்றத்தின் ஆற்றுகைகளை நெறியாள்கை செய்தவரும் இவரே ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013 ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு பேரவை நடாத்திய கலை மன்றங்களுக்கிடையே இடம் பெற்ற நாடக போட்டியில் 2ஆம் இடத்தையும் மற்றும் வில்லிசை, விவாதப்போட்டியில் கோரக்கன்கட்டு புத்தொளி கலா மன்றம் முதன்மை பெற வழிப்படுத்தியவராகவும் விளங்குகின்றார்.

இவர் 1998-2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரதேசத்தில் பல்வேறு அரங்க செயற்பாடுகளில் செ.விந்தன் ஆசிரியர், ம.றோமியல் ஆசிரியர், பாலா மாஸ்ரர் என அழைக்கப்படும் பாலசிங்கம் ஆகியோருடன் இணைந்து நூற்றிற்கு மேற்பட்ட தெருவெளியரங்கு ஆற்றுகைகளில் ஈடுபட்டவராகவும் விளங்குகின்றார்.

பிரதேச தேவாலயங்களான பரந்தன் அந்தோனியார் ஆலயம், ஊரியான் புனித சதா சகாய மாதா ஆலயம் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் உள்ள பல கிறிஸ்தவ தேவாலயங்களில் நடைபெறுகின்ற ஒளிவிழாக்கள் மற்றும் சமய நிகழ்வுகளின் போதும் கிறிஸ்து பிறப்பு தொடர்பான நாடகங்களை பழக்கி அரங்கேற்றங்களையும் செய்தவர். பிரதேச செயலகத்தினால் 2012, 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட ஒளிவிழாக்களில் "கிறிஸ்து பிறப்பு" தொடர்பான ஆற்றுகைகளை இவர் மன்றம் ஊடாக ஆற்றுகை செய்தவராக விளங்குகின்றார்.

2014 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு பேரவை வெளியிட்டிருந்த "தொன்மையின் மூலங்கள்" எனும் ஆய்வேட்டில் உள்ள "கிளிநொச்சி மாவட்ட நாடக வரலாறு" பற்றி செ.விந்தன் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையிலும் "கண்டாவளை பிரதேசம் சார் பண்பாட்டு விழுமியங்கள்" எனும் கட்டுரையிலும் இவரது நாடகத்துறை சார் செயற்பாடுகள் பற்றிய சில பதிவுகள் இடம் பெற்றுள்ளன.

மேலும் நிக்சன் அவர்கள் கொழும்பில் நாடக நெறியாளரும், இலக்கிய ஆர்வலருமான திரு.நா.மொழிவாணன் அவர்களால் வெளியிடப்பட்டிருந்த "முக்கியஸ்தர் முகவரி" எனும் நூலிலும் தன்னைப் பற்றிய செய்திகள் பதிவில் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடுகிறார்.

2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள "புதிய அலை கலை வட்டம்" எனும் அமைப்புடன் இணைந்து செயற்பட்டு பல நாடகங்களை மேடை ஏற்றியதாகவும் அதே ஆண்டிலேயே "தேசிய அரச நாடக விழாவில்" இவ்வமைப்பு சார்ந்து நடித்த "முரண்பாடுகளும் முற்றுப்புள்ளிகளும்" எனும் நாடகம் தேசிய ரீதியில் மூன்றாம் இடம் பிடித்தமையானது தமக்கு நிறைந்த கலைத் திருப்தியை தந்ததாகவும் நினைவில் கொள்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக துறை மட்டுமன்றி கவிதை, கட்டுரை, ஓவியம் வரைதல் போன்றவற்றிலும் ஈடுபாடு உடைய இவர் 2011 ஆம் ஆண்டு முதல் பிரதேச கலாசார பேரவையின் செயற்குழுவுடன் இணைந்து அவற்றின் செயற்பாடுகளுடனும் தன்னை ஈடுபடுத்துபவராயும் விளங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.வடிவேல் சசிக்குமார்

## சிறுவர் நாடகம்

ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டு மார்கழி மாதம் பதின் ஆறாம் திகதி கோரக்கன்கட்டில் பிறந்தது முதல் இன்று வரை அங்கு வசித்து வருகின்றார். இவர் தனது ஆரம்பக்கல்வியை கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை கிளி/முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரியிலும் கற்று தேறியவர்.

இன்று 2003 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரிய சேவையில் இணைந்து கிளி/கல்லாறு மகா வித்தியாலயத்தில் பணியாற்றி வரும் இவர் நாடகத்துறையில் ஈடுபாடு காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

1994 ஆம் ஆண்டு றோமியல் ஆசிரியரின் நெறியாள்கையில் நவஜீவனத்தில் இடம் பெற்ற சமூக நாடகமொன்றில் நடித்தது முதல் நாடகம் நடிப்பதிலும், நெறியாள்கை செய்வதிலும் ஆர்வம் காட்டத் தொடங்கியவர். குறிப்பாக சிறுவர் நாடகங்களை பழக்கி மேடை ஏற்றியிருந்ததாக குறிப்பிடுகிறார். மேலும் "ஏமாந்த நரியார்", "முயலுகிறார் முயலார்" போன்ற சிறுவர் நாடகங்கள் சிறுவர் நாடகப்போட்டிகளில் பரிசில்களையும் பாராட்டுக்களையும் அக்காலத்தில் வென்றன என்கிறார்.

சுகாதார விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு கண்டாவளை கல்விக்கோட்ட மட்டத்தில் கல்லாறு மகா வித்தியாலய மாணவர்களை விழிப்புணர்வு நாடகச் செயற்பாட்டில் நெறிப்படுத்தி முதலிடம் பெற்றமையும் 2010 ஆம் ஆண்டு முதல் கோரக்கன்கட்டு புத்தொளி கலாமன்ற செயற்குழு அங்கத்தவராக விளங்கி நா.நிக்சன், ஆ.செல்வராஜ், சுதர்சன், தர்சன், கேதீஸ் ஆகியோருடன் இணைந்து சமூக விழிப்புணர்வு தெருவெளி ஆற்றுகைகளில் நடித்தும் வருகின்றார் இவர் ஒரு சிறுவர் நாடக நெறியாளராயும் நடிகராகவும் பரிணமிக்கின்றமையை காண முடிகின்றது.

"ஊர் மிலா முற்றம்" எனும் பெயரில் ஒவ்வொரு கிராமங்களிலும் சிறுவர் அரங்க செயற்திட்டங்களை நிக்சன், பாலசிங்கம் ஆகியோருடன் இணைந்து செயற்படுத்தியதாக குறிப்பிடும் இவர் தற்போது கோரக்கன் கட்டு புத்தொளி கலாமன்ற பொருளாளராகவும் செயற்பட்டு வருவதுடன் மன்ற கலை, நாடகச்செயற்பாடுகளுக்கு பக்க பலமாக இருந்தும் வருகிறமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி ஜஜீலா பார்த்தீபன்
## எழுத்தாக்கம், ஊடகம்



ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தொராம் ஆண்டு புரட்டாதி மாதம் ஒன்பதாம் திகதி தம்பான், கரணவாயில் பிறந்த இவர் தருமபுரம் மேற்கை வதிவிடமாகக் கொண்டவர். எமது பிரதேசத்தில் எழுத்து உலகில் பத்திரிகைகள் வாயிலாக தனது கட்டுரைகள், விமர்சன எழுத்துக்கள், கதைகள், தொடர்கதைகள், கவிதைகள் என எழுதி பிரபல்யமாகி வரும் இளம் பெண்படைப்பாளியாக அறிமுகமாயிருக்கிறார்.

தனது படைப்பாக்கங்களில் கருப்பொருளாக பெண்ணியம், சமூக விடுதலை, சுதந்திரவேட்கை,சமூக சீரழிவுகளைக் கண்டு பொங்கி எழல், மனித உணர்வுகளின் பிரதிபலிப்புக்கள், தாய்மை போன்றவற்றை உள்வாங்கி இதுவரை அறுபதுக்கு மேற்பட்ட கவிதைகளையும் முப்பது வரையிலான சிறுகதைகளையும் பத்திரிகைகளினூடாக எழுதியுள்ளார். இவரது ஆக்கங்கள் "பா.ஜஜீலா" என்னும் பெயருடனும் "கோபிகை" எனும் புனைபெயருடனும் அதிகம் இடம் பெற்றுள்ளன.

தனது பள்ளிக்கல்வியை கிளி/தருமபுரம் மகா வித்தியாலயத்தில் பெற்றுக் கொண்டதாக குறிப்பிடும் இவர் இக்காலத்தில் பாடசாலையில் இடம்பெறும் சகல கவிதை, சிறுகதைப்போட்டிகளிலும் பங்குபற்றி பல பரிசில்களை வென்றமை தன்னை தொடர்ந்தும் இத்துறையில் ஈடுபட தூண்டியது என பரவசம் அடைகின்றார்.

தனது எழுத்தாளுமைக்கு "சுடரொளி (வாரமலர்)", "வலம்புரி (சங்குநாதம்)", "தினக்குரல்", "உதயன்", "ஒளி அரசி"(சஞ்சிகை) போன்றவை களம் தந்திருந்தன எனவும் குறிப்பிடுகின்றார்.

பிரதேச செயலகத்தால் நடாத்தப்படுகின்ற தேசிய கலை இலக்கிய போட்டிகளில் 2013, 2014 ஆம் ஆண்டு காலப்பரப்பில் பங்குபற்றி கவிதை, சிறுகதை படைப்பாக்கங்களுக்காக திறந்த பிரிவில் பரிசில்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தனது குடும்ப பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் தனது எழுத்துலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வத்துக்கு தீனிபோடும் வகையில் " ஒளிஅரசி" எனும் மாதாந்த சஞ்சிகையில் முழுநேர பணியாளராக தன்னை இணைத்து அதில் வரும் "இலக்கிய மற்றும் நேர்காணல்" பகுதிகளுக்கும் பொறுப்பாக விளங்கி பல கட்டுரைகளையும் பல பிரபல்யங்கள், சமூக மட்ட அமைப்பு பிரதி நிதிகளின் நேர்காணல்களையும், பெற்றும் ,தொகுத்தும் , எழுதியும் வருகின்றார்.

தொழிலின் நிமிர்த்தம் தற்காலிகமாக கரணவாயில் வசித்து வரும் இவர் தன் கண்டாவளை பிரதேசம் சார்ந்த சமூக, பிரதேச அபிவிருத்திக்காக பத்திரிகைத்துறையூடாக பாடுபடுவதிலும் சமூக விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவதினையும் காண முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.தெய்வேந்திரன் புரட்சிதாசன்

## ஊடகம்

இவர் ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து எட்டாம் ஆண்டு வைகாசி மாதம் இருபத்து எட்டாம் திகதி கோரக்கன்கட்டில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை கிளி/முரசுமோட்டை புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை யாழ்/ கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும் உயர் கல்வியை கிளி/மகா வித்தியாலயத்திலும் கற்றுக்கொண்டார். இளவயது முதலே ஊடகத் துறையிலிருந்த ஈடுபாடு காரணமாக அத்துறை சார்ந்து உள்ளூர் பத்திரிகைகளின் பிரதேச செய்தியாளராக பணியாற்றி வருகிறார். திருமண பந்தத்தில் இணைந்த பின் யாழ். தினக்குரல் பத்திரிகையில் முழு நேர ஊடக வியலாளராகித் தொழில் புரிந்தவர்.

பிரதேச செய்தியாளராக வளர்ந்து வரும் இவர் 2009 பின்னிருந்து பணியாற்றி காலத்தில் எமது பிரதேச செய்திகளை, பிரச்சினைகளை ஊடகங்கள் வாயிலாக வெளிக் கொணர்வதற்காக உழைத்தவர்.

2011 ஆம் ஆண்டில் கலாசார பேரவையில் இணைந்து பணியாற்றியதுடன் அவ்வாண்டு வெளிவந்த முதலாவது "வளை ஓசை" மலரினூடாக இளமைக்கால ஊரின் பழமையான நினைவுகளை மீட்டும் வகையிலான பதிவினை செய்து இருந்தவர்.

இவர் "புரட்சி", "க.தே.தாசன்", "கரவை தர்ஷா" போன்ற புனைப்பெயர்களில் கவிதைகள், கட்டுரைகள் ஊடக துறையில் எழுதிவருகிறார்.

இவர் தொழிலின் நிமித்தம் உதயன், வீரகேசரி பத்திரிகைகளின் செய்தியாளாகவும் "ரோசி மீடியா" நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளராகவும் தற்போது பணியாற்றி வருகின்றார்.

எமது பிரதேசத்தின் நிகழ்வுகள், தேவைகள், நடப்புகளை பத்திரிகை வாயிலாக எடுத்துக் கூறி பிரதேச அபிவிருத்திக்காக ஊடகங்கள் வாயிலாக செய்தியாளனுக்கு உரிய நடுநிலமையுடன் பணியாற்றிவரும் இவர் தன் சேவை எதிர் காலத்தில் பிரதேசத்திற்கு மேலும் கிடைக்க வேண்டும் எனும் நல்லநோக்குடன் உழைக்க எண்ணம் கொண்டு உள்ளதாக கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.பெருமாள் புண்ணியராஜ்
## இலக்கியம், கூத்து

ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி இரண்டாம் ஆண்டு கார்த்திகை மாதம் இருபத்தி இரண்டாம் திகதி கண்டாவளை கூகை மாவடியில் பிறந்து இன்றளவும் இங்கேயே வாழ்ந்து வருகின்றார். ஆரம்பக் கல்வியையும் உயர் கல்வியையும் கிளி/ கண்டாவளை மகா வித்தியாலயத்தில் கற்று தேறியவர். கல்வி கற்ற இளமைக் காலத்திலே கலை ரசனை மிக்கவராக இருந்த இவருக்கு பிரதேசத்தில் இயங்கிய முத்தமிழ் கலா மன்றம் தனக்கு களமாய் அமைந்தது என குறிப்பிடும் இவர் "வழிகாட்டி" எனும் தலைப்பில் மேடை ஏறிய வில்லிசையூடாக தன் முதல் கலைப்பயணம் ஆரம்பமாகியது என குறிப்பிடுகின்றார்.

இவர் கூத்துக்கலையிலும், வில்லிசையிலும், பேச்சு, விவாதம், கவியாக்கம் போன்றவற்றிலும் ஆளுமையுடன் விளங்குகின்ற போதும் கூத்துக் கலை மிகவும் தனக்கு பிடிக்கும் எனவும் காத்தவராஜன் கூத்துக்களில் "முத்துமாரி வேடம்" தாங்கி நடிப்பதில் அலாதி பிரியமும் தனக்கு உண்டு எனவும் குறிப்பிடுகின்றார். 2004 ஆம் ஆண்டில் கண்டாவளை கொம்படி அம்மன் ஆலயத்திலும் 2005 ஆம் ஆண்டில் கண்டாவளை மல்லிகை அம்மன் கோவிலும், 2006ஆம் ஆண்டில் கண்டாவளை கோணங்குளம் கற்பக பிள்ளையார் ஆலயத்திலும் 2013,2014,2015 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக கூகைமாவடி வீரபத்திரர் ஆலயத்திலும் "முத்துமாரி " அம்மன் வேடம் தாங்கியும் நடித்து உள்ளதாக குறிப்பிடும் இவர் வேறு சில பாத்திரங்களையும் சமகால பரப்பில் தாங்கி நடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவர் கண்டாவளை முத்தமிழ் கலா மன்றத்தின் நிறைவேற்று செயற்குழுவின் ஒருவராக விளங்கி செயலாளர், பொருளாளர், தலைவர் எனும் பல பதவிகளை வகித்தவர். இக்காலப்பகுதியில் மன்றத்தினூடான சகல ஆற்றுகைகளுக்கும் காரண கர்த்தராக விளங்கியவர். 2011 ஆம் ஆண்டு முதல் கண்டாவளை பிரதேச செயலக கலாசார பேரவையுடன் இணைந்து பேரவையின் செயற்பாடுகளிலும் பங்கெடுத்து வருகிறார். குறிப்பிட்ட சில காலப்பகுதியில் பேரவையின் பொருளாளராகவும் தொழிற்பட்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச ஆர்வலர்கள், கிளிநொச்சி மாவட்ட கலை மன்றங்களிடையே இடம்பெறும் போட்டிகளில் மன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் போட்டிகளில் பங்கெடுத்து கவிதை, பாடலாக்கம், சிறுகதைகளிலும் குறிப்பாக விவாதங்களிலும் பரிசில்களை வென்றவர். 2015 ஆம் ஆண்டு தட்டுவன் கொட்டியில் இடம்பெற்ற பிரதேச கலாசார விழாவின் போது முத்தமிழ் கலாமன்றத்தின் சார்பாக "கண்டாவளை வரலாறு" எனும் வில்லிசையினை நெறியாள்கை செய்ததுடன் சிறப்பாக ஆற்றுகையும் செய்து பாராட்டுக்கள் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் யாழ். பல்கலையில் உடற்கல்வித்துறையில் டிப்ளோமா கற்கை நெறியை முடித்து ஆசிரியர் பணியில் இணைந்து கொண்டதுடன் யாழ். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆசிரிய மாணவனாக இப்போது திகழ்வது குறிப்பிடத்தக்கது.

இவரது பன்முக கலை ஆளுமை வெளிப்பட கலாசாலையிலும் களம் கிடைந்திருந்தது. அந்த வகையில் இங்கு தென்மோடிக் கூத்தான "பாஞ்சாலி சபதத்தில்" துச்சாதனனாகவும், "மாற்றம்" எனும் சமூக நாடகத்தில் "மகன்" பாத்திரத்தையும் நடித்ததுடன் ஆசிரியமானவனாகவும் வகுப்புக்களுக்கிடையிலான மெல்லிசைப் போட்டியில் பரிசிலினையும் பெற்றமையும் வில்லிசைப்போட்டியில் அணித்தலைவராக விளங்கி அதில் "சிறுவர் உரிமை" எனும் தலைப்பிலான வில்லிசை ஆற்றுகை செய்கின்ற போட்டியில் முதலிடமும் பெற்றமையானது தன் கலாசாலை காலத்தில் ஆரிய மாணவர்கள் மத்தியில் புகழையும் விரிவுரையாளர்களால் பாராட்டுக்களையும் ஈட்டித் தந்திருந்த இனிமையான காலப்பகுதியாக நினைவில் கொள்கின்றார்.

பழகுவதற்கு இளகிய உள்ளமும் அமைதியானதும் இனிமையானதுமான பேச்சும் உடைய இவர் கூத்துப் பாடல்களையும், தேவாரங்களைப் பண்ணோடு இசைப்பதிலும் வல்லவர்.

கண்டாவளைப் பிரதேசத்தின் ஆலய உற்சவங்களை முன்னிட்டு 2014, 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கூகைமாவடி வீரபத்திரர் ஆலயத்தில் ஆற்றுகை செய்யப்பட்டிருந்த "சம்பூர்ண கூத்துக்களுக்கான" சுமார் ஒன்றரை மாத கா்ல இரவு ஒத்திகை நிகழ்வுகள் யாவும் இவரது வீட்டு முன்றலிலே இடம்பெறுவது வழக்கம். இதன் போது பிரதேச கலைஞர்களை ஒருங்கிணைப்பதும், அவர்களுக்கான உபசரணைகளையும், ஏற்பாடுகளையும் தூரப்பிதேசத்திலிருந்து தங்கிப் பழகும் கலைஞர் மற்றும் அண்ணாவிமார்கள், பின்னணிக்கலைஞர்களுக்கான சகல வசதிகளையும் முன்னின்று செய்து கொடுக்கும் நல்ல பண்பாளரும் கூட. கூத்து பழக்க காலத்தில் இவரது வீட்டுச் சூழல் ஓர் கலைக்கூடமாக மாறிவிடுவது வழக்கமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டு வரும் சமகாலத்தில் தமது கண்டாவளை பிரதேசத்தின் பூர்வீக கலை செழுமையை தாம் எதிர்காலச் சந்ததிக்கு கடத்துவதற்கு தம்மாலான முயற்சிகளை முன்னின்று முடிக்கும் இயல்பினர்.

இவர் அவ்வப்போது 'கண்டாவளையூர் இளங்கவி', 'இளங்கவி' எனும் புனைபெயரில் பாடல், கவிதைகளை உள்ளூர் பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும் எழுதி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.கைலாயநாதன் துஸ்யந்தன்

## இலக்கியம், பல்துறை

தட்டுவன்கொட்டி கிராமத்தினை சேர்ந்த இவர் ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்திரெண்டாம் ஆண்டு மார்கழி மாதம் எட்டாம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்தவராவார். தற்போது கண்ணகிநகரை வதிவிடமாக கொண்டவர்.

தனது ஆரம்பக்கல்வியை கிளி/ தட்டுவன்கொட்டி கண்ணகி அம்மன் வித்தியாலயத்திலும் பின் தொடர்ந்து உயர் கல்வி வரை கிளி/ முருகானந்தாக் கல்லூரியிலும் கற்றுத் தேறியுள்ளார். யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழினை விரும்பிய பாடமாக தெரிவு செய்து இளங்கலைமாணி பட்டத்தையும் 2015 ஆம் ஆண்டில் இல் தமிழில் முதுகலைமாணி பட்டத்தையும் பெற்றுக் கொண்டவர்.

இளம் பராயத்திலேயே தமிழ் இலக்கியங்களை விரும்பிப் படிப்பதிலும், கூத்துக்களை பார்ப்பதிலும் , பட்டிமன்றங்களை பார்ப்பதிலும் இருந்த ஈடுபாடானது இவர் பின்னாளில் சிறந்ததோர் மேடை பேச்சாளராகவும், விவாதிக்கும் ஆற்றலுடையவராகவும் தமிழின் இலக்கிய செழுமைகளையும் சிறப்புக்களையும் நன்கு அறிந்து கொண்டவராயும் ஆக்கிவிட்டது.

தன்னைச் சார்ந்த மண்ணின் இயல்பான கூத்துக்கலைப் பற்று இவரையும் ஒட்டிக் கொண்டமையால் சிறந்த இளம் கூத்து கலைஞனாகவும் இவரை வளரச் செய்தது.

பாடசாலைக் காலத்தில் கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத்தால் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளிலும் , தமிழ்த்தினப்போட்டிகளிலும் பல பரிசில்களையும் வென்றதுடன் நாடக போட்டிகளிலும் நடித்து பரிசில்கள் பெற்றிருந்தவர். 2003 ஆம் ஆண்டில் அகில இலங்கை ரீதியாக சைவ பரிபாலன சபை நடாத்திய சமய அறிவுப் போட்டியில் 2ஆம் இடத்தை பெற்றுக்கொண்டதுடன் பல்கலையில் கலை வார நிகழ்வுகளிலும் பேச்சு , நாடகம் ,விவாதம் , நாட்டார் வழக்காற்றியல் துறைகளில் பிரகாசித்தவராக விளங்குகின்றார்.

தனது தமிழ் முதுகலைமாணி கற்கை நெறியின் ஒரு அலகாக “புளியம் பொக்கணை பிரதேசத்தில் சிறு தெய்வ வழிபாடுகள்” எனும் ஆய்வேட்டை யாழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக உயர்பட்டபடிப்புக்கள் பீடத்திற்கு பேராசிரியர் கி.விசாகரூபன் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் சமர்ப்பித்திருந்தமை எமது பிரதேச கிராமிய வழிபாட்டு முறைகளை பல்கலைக்கழக மட்டம் வரை கொண்டு சென்ற பிரதேச பற்றாளனாகவும் இவரை இனம் காண முடிகின்றது.

ஆசிரியர் தொழிலின் நிமித்தம் காலி மாவட்டத்தில் உள்ள தீவித்துறை தமிழ் கனிஸ்ட வித்தியாலயத்தில் 2014 ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வரும் எமது பிரதேசத்துடன் கலை , கலாசாரம் செயற்பாடுகளில் இடையறாத தொடர்பை பேணி வருபவர்.

2015 ஆம் ஆண்டில் தட்டுவன் கொட்டி கிராமத்தில் இடம் பெற்ற கலாசார விழாவில் பட்டிமன்ற நிகழ்வில் பங்கு பற்றி தனது விவாத திறனூடாக தனது பேச்சாற்றலையும், தமிழ் இலக்கியங்கள் பற்றிய தனது பரந்துபட்ட அறிவை வெளிப்படுத்தியிருந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.துரைசிங்கம் மோகனசிறி
## ஓவியம்

உமையாள்புரம் கிராம சேவகர் பிரிவின் கால் ஏக்கர் விஸ்தரிப்பு திட்டத்தினைச் சேர்ந்த இவ் இளம் ஓவியக்கலைஞர், ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி எட்டாம் ஆண்டு தை மாதம் பன்னிரண்டாம் திகதி பிறந்தவர் ஆவார். இவர் ஆரம்பக்கல்வி முதல் உயர் கல்வி வரை கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் பெற்று கொண்டவர்.

இளமைப்பராயத்தில் ஓவியம் தீட்டுவதில் ஆர்வம் உடையவராக விளங்கிய இவர் பரந்தனில் தான் கற்ற பாடசாலையின் கட்டட சுவர் ஓவியங்களை தனது கை வண்ணத்தால் அழகு படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

2000ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கு மாகாண மட்டத்தில் தமிழ் தின போட்டியில் "சித்திரமும் கருத்து வெளிப்பாடும்" எனும் கருப்பொருளில் ஓவியம் வரைந்து முதலிடத்தை பெற்றமையும் 2005 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரியில் நடாத்தப்பட்ட "அழகெழில்" சித்திர போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாவது இடத்தையும் பெற்றமையை தனது பள்ளிக்கால பசுமையான ஞாபகங்களாக கூறுகிறார்.


இக் கலைஞர் 2005 ஆம் ஆண்டில் கண்டாவளை பிரதேச செயலகம் சிறுவர் தினத்தை முன்னிட்டு சமூக நலத்துறை திணைக்கள அனுசரணையுடன் நடாத்திய கவிதைப்போட்டியில் முதலிடம் பெற்றமையும் இவர் ஓவியம் மட்டுமின்றி கவிதைகளை எழுதுவதிலும் தேர்ச்சியுடையவராக இருந்தமையினை காட்டுவன.

இவர் சிறந்த விளையாட்டு வீரராகவும் பரந்தன் இளைஞர் வட்ட உறுப்பினராகவும் விளங்கியவர். பரந்தன் பிரதேசத்தில் பல பொது அமைப்புக்களின் பெயர் பலகைகளில் இவரது கை வண்ண ஆளுமை வெளிப்பட்டு நிற்கின்றது.

இவர் இன்றைய கண்டாவளை பிரதேச செயலக இலட்சினையை 2010 ஆம் ஆண்டில் சீரமைத்து வரைந்து பெற்றுக் கொள்ள உதவி வழங்கியிருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இக்கலைஞன் தொழிலின் நிமித்தம் 2014 ஆம் ஆண்டில் பின்னரைப்பகுதியில் மத்திய கிழக்கு நாடு ஒன்றிற்கு சென்று உள்ளமையை அறியமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.பாலசுந்தரம் வசந்தன்

## இசை

ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து எட்டாம் ஆண்டு சித்திரை ஒன்பதாம் திகதி உமையாள்புரத்தில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை கிளி/முரசுமோட்டை புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும் இடைநிலை மற்றும் உயர் கல்வியை கிளி/தருமபுரம் மத்திய கல்லூரியிலும் கற்றுக் கொண்டவர்.

இளமையிலேயே பாடலிசைத்தலிலும், கர்நாடக சங்கீதத்திலும் நாட்டமுடைய இவர் தனது பாடசாலைக் காலத்தில் தமிழ் மொழி கலைத்திறன் போட்டியில் தனி இசைக்கான போட்டியில் முதலாம் இடத்தை கோட்ட மட்டத்திலும் பாவோதல் போட்டிகளிலும் 2003,2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முதலிடத்தை பெற்றமை பற்றி குறிப்பிடுகின்றார்.

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கம் 2001, 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடத்திய கிராமியப் பாடல், தனி இசை, குழு இசை நிகழ்வுகளிலும் முதலிடங்களைப் பெற்றிருந்தவர். இவர் 2001 ஆம் ஆண்டு முதல் தருமபுரத்தை சேர்ந்த செல்வி மு. நடனவதி ஆசிரியரிடம் முறையாக இரண்டாம் தரம்வரை சங்கீதத்தை கற்று வந்தவர்.

விஸ்வமடு அதிசய விநாயகர் ஆலயத்தில் 2005 ஆம் ஆண்டு உற்சவ காலத்தின் போது கீர்த்தனை மற்றும் பக்தி பாடல்களை தனிக்கச்சேரியாக செய்திருந்தமையானது தனக்கு சபைகளில் "தனி கச்சேரி" செய்கின்ற ஆளுமைக்கு வழிகோலியதாக குறிப்பிடுகின்றார்.

2003-2006 காலப்பகுதியில் விஸ்வமடு வானொலி மன்றத்தில் பாடகராக செயற்பட்டதுடன் பல்வேறு கலைநிகழ்வுகளிற்கும், நடன நிகழ்வுகளுக்கும் பின்னணி பாடகராக விளங்கியவர்.

2015 ஆம் ஆண்டில் பிரதேச கலாசாரப்பேரவை, பிரதேச செயலகத்துடன் இணைந்து தட்டுவன் கொட்டியில் ஐப்பசி முதலாம் திகதி நடத்தியிருந்த பிரதேச கலாசார விழாவின் போது இவரது தலைமையிலான தருமபுரத்தை சேர்ந்த வாய்ப்பாட்டுக் கலைஞர் குழு "கர்நாடக இசை விருந்தொன்றை" அரங்கேற்றி பார்வையாளர்களாலும், பங்குகொண்டிருந்த விருந்தினர்களாலும் பாராட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருந்தது.

வாய்ப்பாட்டையும், வயலின் நரம்புக்கருவியையும் மீட்டுவதில் தொடர்ந்து பயிற்சி பெற்று வரும் இவர் பிரதேசத்தின் இசை கலைக்கு தன்னாலான முயற்சியை ஓர் கலைமன்றம் போன்ற பொது அமைப்பினூடாக முன்னெடுக்கவேண்டும் எனும் நோக்குடன் உமையாள்புரத்தில் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமதி தேவப்பிரியா கோபிநாத்

## நடனம்

யாழ்ப்பாணம் ஈச்சைமோட்டையில் ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டு புரட்டாதி மாதம் பத்தாம் திகதி பிறந்த இவர் இன்று கட்டைக்காடு பெரிய குளத்தை வதிவிடமாகக் கொண்ட இளம்பரத நாட்டிய கலைஞராவார்.

இவர் ஆரம்ப, இடைநிலை கல்விகளை யாழ்ப்பாணம் சுண்டிகுளி மகளிர் கல்லூரியிலும், உயர் கல்வியை கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் கற்றவர். 2015ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தில் பரதத்தை பட்டப்படிப்பிற்குரிய பாடமாக கொண்டு இளம் நுண்கலை மாணி பட்டத்தை பூர்த்தி செய்துள்ளார்.

தனக்கு பிடித்தமான நடனக்கலையை பிரதேசத்தில் இளையோருக்கு பகிர்ந்து கொள்ளும் எண்ணம் கொண்டு செயற்படுகின்றார். பரந்தன் பிரதேசத்திலும் பெரியகுளம் கட்டைக்காடு பிரதேசத்திலும் இன்று சுமார் 60 வரையிலான இளம் பராயத்தினருக்கு சாஸ்திர ரீதியாக, தான் யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த திருமதி மாலினி கண்ணதாசனிடம் பயின்ற பரதத்தை பழக்கி வருகின்றார்.

2014, 2015 ஆண்டு காலப்பகுதியில் "அரியாலை ஏழிசை நந்தன ஆலய" மாணவியாக விளங்கி அதன் ஆண்டு விழாக்காலத்தில் நடன ஆற்றுகைகளை யாழ். நீராவியடியில் அமைந்துள்ள "இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியிலும்" நிகழ்த்தியிருந்தவர்களில் இவரும் ஒருவர்.

பரதக்கலையை இளம் கலைஞர்களுக்கு பழக்குவதுடன் நின்று விடாது "கட்டைக்காடு கலை ஒளி மன்றத்தின்" உறுப்பினராகவும் இருந்து வருகின்றார். இவ் மன்றத்தினூடான கலை நிகழ்வுகளை கிளிநொச்சி மாவட்ட மட்டத்திலும் ஆற்றுப்படுத்தி வருபவர்.

"2015 ஆம் ஆண்டின் அரச நடன விழாவில்" கிளிநொச்சி மாவட்ட ரீதியாக இரு நடன அளிக்கைகளை கலை ஒளி கலாமன்றம் ஊடாக நெறியாள்கை செய்து முதலாம் , இரண்டாம் இடங்களை பெற்றிருந்தமை விசேட அம்சமாகும்.

2015 ஆம் ஆண்டின் புத்தாண்டை வரவேற்கும் நிகழ்வினை "வசந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சி நிறுவனம்" கிளிநொச்சி மாவட்ட செயலகத்துடன் இணைந்து மலையாளபுரம் முத்துமாரி அம்மன் கோவிலின் முன்றலில் செய்த நேரடி தொலைக்காட்சி நிகழ்வின் போது கலைஒளி கலா மன்றத்தினூடாக "கண்டாவளை பிரதேச கலைக்குழு" சார்பாக சிறந்த பரத நாட்டிய அளிக்கையை நெறியாள்கை செய்து பாராட்டுப்பெற்றவர்.

இவர் சிறந்த நடனக்கலைஞராக மட்டுமன்றி "வாய்ப்பாட்டு", "ஒப்பனை" "நட்டுவாங்கம்" போன்ற வற்றிலும் நல்ல பரீட்சயம் உடையவராக திகழ்கின்றார். 2015 ஆம் ஆண்டின் பிரதேச கலாசார பேரவையின் பதவி வழி உறுப்பினரில் ஒருவராகவும் விளங்கி பிரதேச செயலக, பேரவை, மற்றும் மாவட்ட செயலக கலைத்துறை சார் நிகழ்வுகளின் போது பரத கலை சார் தனது பங்களிப்பை பெரு விருப்புடனும் அர்ப்பணிப்புடனும் அதற்குரிய மரியாதையுடனும் முன்னெடுத்து வருபவராக விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.ஆமோஸ் பேனாட்
## நடிப்பு

எமது பிரதேசத்தின் புதிய ஆற்றுகை செயற்பாட்டாளராக விளங்கும் இவர் ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டு புரட்டாதி மாதம் பதினொராம் திகதி தருமபுரத்தில் பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியையும் உயர் கல்வியையும் கிளி/ தருமபுரம் மத்திய கல்லூரியில் கற்றுக் கொண்டவர். இடை நிலைக்கல்வியை (6-9 வரை) பண்டாரவளை ஊவா கைலன் மகா வித்தியாலயத்திலும் கற்றவர்.

பாடசாலைக்காலத்தில் விளையாட்டு , நாடகம், பேச்சு, பாட்டு, கவிதைத்துறையில் ஈடுபாடு உடையவரான இவர் பாடசாலையில் மாணவர் மன்றத்தில் 2012 ஆம் ஆண்டில் நடித்த நாடகம், பாடசாலையில் புகழினை தந்திருந்தது முதல் நாடகத்துறையில் தீவிர ஈடுபாடு காட்டத்தொடங்கியதாகவும் குறிப்பிடுகின்றார்.

உள்நாட்டு போரின் இறுதியில் புனர்வாழ்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் "அனோஜா வீரசிங்கம்" எனும் புகழ் பெற்ற நாடகக் கலைஞருடைய நாடக பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றியமையால் ஏற்பட்ட ஆர்வம் தன்னை பின்னாளில் விவாத அரங்குமுறை, மாற்றத்திற்கான அரங்கமுறை நாடக உத்தியில் சிறப்பாக "அபின அக்கடமி ஒப் பெபோமிங் ஆட்ஸ்" எனும் கொழும்பு, தெகிவளையில் நாடகம், யோகாசனம் போன்ற ஆற்றுகைகளுக்கான கற்கை நிலையத்தில் மூன்று வருட முழு நேரக்கற்கையை பின்னாளில் தான் நிறைவு உறுத்த அத்திவாரமிட்டது என்கின்றார். அந்நிறுவனத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட சுமார் ஐந்நூறு வரையான தமிழ், சிங்கள மொழிகளூடான விவாத அரங்கச் செயற்பாடுகளில் பங்கு பற்றி நடித்துள்ளதாக குறிப்பிடுகின்றார்.

விவாத அரங்கு உத்தி முறையில் உலகளாவிய ரீதியில் பிரபல்யம் மிக்கவராக விளங்குகிற இங்கிலாந்தை சேர்ந்த ஜோன் மாட்டின் அவர்களால் யாழ் திருமறைக் கலாமன்றத்தில் 2013/07/06 ஆம் திகதி இடம் பெற்ற பிரித்தானிய தூதரகக்கிளை அலுவலக திறப்பு விழாவின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ஆற்றுகையில் பங்கு பற்றி பாராட்டுப் பெற்றிருந்தவர்.

"கெயார்", "வேள்ட் விஷன்" போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு மாவட்ட செயலக கலாசார பிரிவுகளாலும், வன்னிப்பிரதேசம் எங்கும் நடத்தியிருந்த விவாத அரங்குகளில் பங்கு பற்றியிருந்தார்.

2015 ஆம் ஆண்டில் இந்தியாவில் நாற்பது நாட்கள் கேரளாவில் "சிவானந்தா ஆச்சிரமம்" "சுவாமி சீத்தாராமாவிடம்" பயிற்சி கற்கைக்காக சென்று முறையாக யோகாசன ஆசன முறைகளை கற்றுக் கொண்டு தற்போது அதை கொழும்பில் "அபின அக்கடமி" யில் கற்பித்து வருகிறார். அங்கு "யோகாச் சாரியா" பட்டத்தையும் பெற்றுக் கொண்டவர். அபின அக்கடமியில் நாடக நெறியாளர்களுள் தமிழ் மொழி மூல வளவாளரில் ஒருவராக விளங்கி வருகின்றார்.

"கொவிசெத்த" அதிஸ்ட லாபச்சீட்டு விளம்பரங்களில் நடித்து வரும் இவர் குறும்பட முயற்சிகளிலும் "கிற்றார்" வாத்திய வாசிப்பதில் ஓரளவு பரீட்சயம் உடையவராகவும் விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்வி வேலாயுதபிள்ளை சுபிதா (வேல்மகள்)

## கவிதை

கலவெட்டித்திடல், புளியம் பொக்கணையில் ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து ஒன்பதாம் ஆண்டு ஆனி மாதம் இருபத்து எட்டாம் திகதி பிறந்த இவர் கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயத்தில் ஆரம்ப, இடைநிலை கல்விகளை கற்றதுடன் உயர் கல்வியை கிளி/முருகானந்தா கல்லூரியிலும் கற்றவர்.

பள்ளிப் பருவத்திலேயே தமிழ் இலக்கியங்களை விரும்பிப் படிப்பதில் ஆர்வமுடைய இவர் அவ்வப்போது பாடசாலைகளில் இடம்பெறுகின்ற கவிதை எழுதுதல், சிறுகதை எழுதுதல் போட்டிகளிலும் பங்குப்பற்றி பரிசில்களை வென்றமையை நினைவில் மீட்டுகின்றார்.

அதிகம் கவிதைகளை எழுதுவதில் ஆர்வமுடைய இவர் தனது கவிதைகளை பதின்நான்கு வயது முதலே எழுத தொடங்கியவர். வலம்புரி, உதயன், சங்கு நாதம், வீரகேசரி வார வெளியீடு, தினப்புயல், சுடரொளி, தினமுரசுகளிலும் இன்றுவரை "வேல் மகள்" எனும் புனைப்பெயரில் எழுதி வருகின்றார். சுமார் நூறுவரையான இவரது கவிதைகள் பத்திரிகைளில் பிரசுர வாய்ப்பை பெற்றுள்ளன.

தனது தந்தை வாயிலாக மரபு கவிதைகளையும், செய்யுள், தமிழ் இலக்கியங்களையும் கற்பதற்கு ஏற்பட்ட ஆர்வம் புதுக்கவிதைகளை எழுதத் தூண்டியதாகவும் குறிப்பிடுகின்றார். இவரது கவிதைகள் பெண்ணியம், இயற்கை, தாய்மை, ஆன்மீகம், காதல், விடுதலை உணர்வு, போரின் வடுக்கள் போன்றவற்றினை பிரதிபலிப்பனவாய் உள்ளமையைக் காண முடிகிறது.

இவரது இளைய சகோதரரும் "வேல்நயன்" எனும் பெயரில் கவிதைகளை எழுதத் தொடங்கி உள்ளதாகவும் குறிப்பிடும் இவர் கண்டாவளை பிரதேச செயலக கலாசார பிரிவினால் நடாத்தப் படுகின்ற கவிதை போட்டிகளிலும் பங்குப்பற்றுவதுடன் பிரதேச மலராக வெளிவரும் "வளை ஓசை" இதழ்களிலும் கவிதைகளை எழுதி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது கவிதைகளை நூலுருவில் தொகுத்து வெளியிட கலாசார பேரவையும் அச்சிடுவதற்கு அனுசரணையை 2015 ஆம் ஆண்டில் பிரதேச கலாசார அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் பிரதேச செயலக ரீதியாக எழுத்தாளர்களுக்கு வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்படுகிற நிதி ஊக்குவிப்பாலும் “நினைவுகளின் நினைவோடு” எனும் கவிதை தொகுப்பு கன்னித் தொகுப்பாக வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்ட பிரதேசத்தில் வளர்ந்து வரும் பெண் எழுத்தாளர்களுள் குறிப்பாக ஈழத்து தமிழ் கவிதை பரப்பில் அடியெடுத்து வைத்து நடக்க இவர் எடுகின்ற முயற்சி எதிர் காலத்தில் பலமடையும் என நம்பலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரதேச கலாசார பேரவை,**
பிரதேச செயலகம்,
கண்டாவளை, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org